விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 308 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 06 வியாழக்கிழமை (23.10.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



# மாத்தறை வெலிகம பிரதேச சபையின்

# தவிசாளர் சுட்டுப் படுகொலை

## கடிதம் ஒன்றில் கையொப்பம் பெறுவது போன்று பிரவேசித்து துப்பாக்கிச் சூடு



(மாத்தறை)

மாத்தறையில் ஐக்கிய மக்கள் சக்தியின் வெலிகம பிரதேச சபைத் தவிசாளர் லசந்த விக்ரமசேகர (வயது-38) நேற்றுக் காலை சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் விபத்து; இளைஞன் உயிரிழப்பு



(மன்னார்)

மன்னார் மதவாச்சி பிரதான வீதி பெரிய கட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற சொகுசு 15ஆம் பக்கம் பார்க்க

## மின்சாரம் தாக்கியதில் நாவாந்துறையில் ஒருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

மின்சார வயரினை றோல்பிளக்கில் வாயால் கொளுவிய விஷேட தேவைக்கு உட்பட்ட ஆண் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார். 15ஆம் பக்கம் பார்க்க

## யாழில் பிறந்து 13 நாட்களேயான ஆண் சிசு உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் பிறந்து 13 நாட்களேயான ஆண் சிசு ஒன்று மரண மடைந்துள்ளது.

இதில் அல்வாய் வடக்கைச் சேர்ந்த 15ஆம் பக்கம் பார்க்க

## நிமோனியாக் காய்ச்சலால் குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

நிமோனியாக் காய்ச்சல் காரணமாகக் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் கைதடி மத்தியைச் சேர்ந்த 15ஆம் பக்கம் பார்க்க

## யாழில் மூச்செடுக்க சிரமப்பட்ட 7 வயதுச் சிறுமி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மூச்செடுக்க சிரமப்பட்ட சிறுமி ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் யாழ்ப்பாணம் - குருநகர் 15ஆம் பக்கம் பார்க்க

## கொல்லப்பட்ட தவிசாளர் பாதாளக் குழுவுடன் தொடர்புடையவர்

### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால



(கொழும்பு)

சுட்டுக் கொலை செய்யப்பட்ட வெலிக பிரதேச சபைத் தவிசாளர், பாதாள உலகக் குழுவுடன் தொடர்புடையவர் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

குற்றச் செயல் 15ஆம் பக்கம் பார்க்க

## தேசிய பாதுகாப்பு இதுதானா?

### வெலிகம பிரதேச சபைத் தவிசாளர் கொலை தொடர்பில் சபையில் சஜித் கேள்வி



(கொழும்பு)

வெலிகம பிரதேச சபைத் தலைவர், சபைக்குள் இருக்கும் போதே அவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். தேசிய பாதுகாப்பு இதுதானா என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரை 16ஆம் பக்கம் பார்க்க

### மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகமாக

## காரைநகரைச் சேர்ந்த லோகநாதன் பதவி உயர்வு



(கொழும்பு)

மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகமாகக் காரைநகர் களபூமியைச் சேர்ந்த தர்மலிங்கம் லோகநாதன் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## போதை மாத்திரைகளுடன் யாழில் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று போதை மாத்திரை வியாபாரி ஒருவரும் சந்தேகநபர் ஒருவருமென இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது அவர்களிடமிருந்து 110 போதை மாத் 15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணியாளர்கள் தேவை

கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள யோகர் சுவாமிகள் முதியோர் இல்லத்தில் பணியாற்றுவதற்கு முகாமையாளர், கணக்காளர், சமையல்காரர், பராமரிப்பாளர்கள் தேவையாகவுள்ளது.

**முகாமையாளர்களுக்கான தகைமைகள்**

1) வயதெல்லை : 25 – 65 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
2) நல்ல உடல்,உள ஆரோக்கியம் உள்ளவராகவும் நல்லொழுக்கம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
3) I. துறைசார் பணியில் முன் அனுபவம் அல்லது பட்டதாரி அல்லது HNDA தாரியாகவும் அல்லது சமூகசேவை டிப்ளோமா பெற்றவராகவும் அல்லது ELDER CARE, NVQ தொழிற்தகைமை சான்றிதழ் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.
II. ஆங்கிலப்புலமை மற்றும் கணக்கியல் சார்ந்த அறிவு பெற்றவராகவும் இருத்தல் விரும்பத்தக்கது.
4) தங்கியிருந்து கடமையாற்றுதல் வேண்டும்.
5) சம்பளம்:– கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும் நேரில் பேசி தீர்மானித்துக் கொள்ளலாம்.

**கணக்காளருக்கான தகைமைகள்**

1. வயதெல்லை : 25 – 55 க்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
2. நல்ல உடல், உள ஆரோக்கியம் உள்ளவராகவும் சிறந்த நல்லொழுக்கம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
3. வர்த்தகப்பட்டதாரி அல்லது HNDA அல்லது துறைசார் பணியில் முன் அனுபவம் உள்ளவராக அல்லது G.C.E A/L வர்த்தகப்பிரிவில் சித்தி என்பவற்றுடன் கணனி அறிவு பெற்றவராகவும் இருத்தல் சிறந்தது.
4. சம்பளம் : கவர்ச்சியான சம்பளம் வழங்கப்படும். (பேசித் தீர்மானிக்கலாம்)

**சமையல்காரர் தகைமைகள்**

1. சிறந்த உடல்,உள ஆரோக்கியம் உள்ளவராகவும் சிறந்த நல்லொழுக்கம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
2. வயதெல்லை : 25 – 60 க்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
3. தொழில் முன் அனுபவம் கொண்டவர்கள் விரும்பத்தக்கது.
4. தங்கியிருந்து கடமையாற்ற வேண்டும்.
5. சம்பளம் – கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

**பராமரிப்பாளர்களுக்கான தகைமைகள்**

1. வயது எல்லை : 25 – 55 உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
2. நல்ல உடல், உள ஆரோக்கியம் உள்ளவராகவும் சிறந்த நல்லொழுக்கம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
3. க.பொ.த. (சா/தரம்) அல்லது அதற்கு மேலான தகைமை.
4. ELDER CARE NVQ தொழிற்தகைமை சான்றிதழ் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
5. முன் அனுபவம் பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.
6. இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.
7. சம்பளம் – கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

**குறிப்பு:**- உங்கள் சம்பளத்துடன் ETF,EPF ஏற்பாடுகள் உண்டு எல்லா பணிகளுக்கும் ஒரு மாதகால தகுதிகாண் காலம் உண்டு, உணவு தங்குமிடம் இலவசமாக வழங்கப்படும். அனைத்து பணிகளுக்கும் ஆண்,பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

குறித்த பணிகளுக்கு விண்ணப்பிக்க தகுதி உடையவர்கள் 12.11.2025 முன்னர் தங்கள் சுயவிபரத்தினை கீழ் குறிப்பிடும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்க முடியும்.

தொடர்பு முகவரி : **திரு.சு.தர்மரத்தினம் (தலைவர்)**
**யோகர் சுவாமிகள் திருவடிநிலைய முதியோர் இல்லம்,**
**வன்னேரிக்குளம்.**
**077 020 0009**

(C-4165)


# யாழில் சுற்றிவளைக்கப்பட்ட வீடு இரண்டு இளைஞர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முலவைச் சந்தி அருகில் உள்ள வீடொன்று நேற்று அதிகாலை பொலிஸாரால் அதிரடியாக சுற்றி வளைக்கப்பட்டு, சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

குறித்த வீட்டில் வதியும் இளைஞனால் தனது பிறந்த தினத்தினை முன்னிட்டு, பெருமளவான இளைஞர்களை ஒன்று கூட்டி பிறந்தநாள் கொண்டாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அதில் இடம்பெற்ற சில சம்பவங்கள் தொடர்பில் பல்வேறு தரப்பினரும் தமது அதிருப்தியை வெளியிட்டு இருந்த நிலையில், அது குறித்து விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் பகிரங்கமாக கோரிக்கை விடுத்திருந்தார்.

இதுதொடர்பில் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் பொலிஸார் பெற்றுக் கொண்ட தேடுதல் அனுமதிக்கு அமைய, பொலிஸ் அதிரடிப் படையினரின் ஒத்துழைப்புடன், யாழ்ப்பாண தலைமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினரால் இந்த விசேட சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இந்தச் சோதனையின் போது, குற்றம் சாட்டப்பட்ட குறித்த நபர் வீட்டில் இருக்கவில்லை. எனினும் வீட்டின் வளாகத்தில் இருந்து பொலிஸாரால் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டதுடன், வீட்டில் சந்தேகத்துக்கு இடமான முறையில் தரித்துநின்ற இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். (ம-7,33,104)


## காணி விற்பனைக்கு உண்டு


**யாழ்ப்பாணம், வடமராட்சி, பருத்தித்துறை, அல்வாய் முத்துமாரி அம்மன் கோவில் அருகாமையில் 27 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- 2 பரப்பாகவும் 1 ½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- 16 அடிப்பாதையுடன் நிலப்பரப்பு
- அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலயம் 100m தூரம்.
- பருத்தித்துறை BUS நிலையம் 1 ½ K.m
- நெல்லியடி BUS நிலையம் 1 ½ K.m
- மேட்டுநிலம், நன்னீர் ஊற்று, குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- ஒரு பரப்பின் விலை வீதி முகப்புடன் 10 இலட்சம் ரூபா.
- இரண்டாம் துண்டு 7 இலட்சம் ரூபா.
- 3 ஆம் துண்டு 5 இலட்சம் ரூபா.
- பார்வையிடும் நேரம் : காலை 08 : 00 - மாலை 06 :00

(5713)

**076 860 2770, 076 987 8617**


# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **இராஜரட்ணம் தயாநிதி**

**திதி : 23.10.2025 வியாழக்கிழமை**

ஆண்டு ஐந்து முடிந்ததுவோ உங்கள்
அன்பு முகம் நீங்கிச் சென்று
ஆனாலும் எம் மனமோ இன்னும்
ஆறவில்லை - அப்பா
நேற்றுப் போல் இருக்குதப்பா
அழுத பொழுதுகள் காலங்கள் பல
கடந்தாலும் என்றும் எம் மனதில்
காவியமாய் இருப்பீர்கள் அப்பா!
கலையாத உங்கள் நினைவுகளுடன்
ஆத்ம சாந்திக்காக வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"இந்திரபிரஸ்தம்",
கேணியடி வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.


என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்

(C-4162)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5ஆம் ஆண்டு 3ஆம் ஆண்டு

# நினைவு கண்ணீர் காணிக்கை



அமரர்.

## மாணிக்கம் சண்முகநாதன்

(புதிய உயர்கல்லூரி – நிர்வாக இயக்குநர்)

விண்ணில்–26.09.2020

திதி:–02.10.2025

அமரர்.

## அருள்நங்கை சண்முகநாதன்

(விரிவுரையாளர் –இந்துநாகரீகம்)

விண்ணில்–27.10.2022

திதி:– 23.10.2025



எம் பாசமிகு பெற்றோர்களே!
குடும்பத்தின் குல விளக்குகளாய் மிளிர்ந்தீர்கள்
அன்புதனை எமக்கூட்டி இன்ப வாழ்வு தந்தீர்கள்
நலமுடனும் சிறப்புடனும் எம் வாழ்வு சிறக்க பாடுபட்டீர்
நீண்ட காலம் எம்முடன் வாழாது இமை மூடினீர்கள்
உறவுகளை தவிக்கவிட்டு தீராத துயரம் தந்தீர்
நாம் இருக்கும் காலம்வரை மறவோம் உங்களை அப்பா!

ஆண்டுகள் ஐந்து ஆன போதும் அப்பா உங்கள் குரல்
எம் காதில் இன்றும் ஒலிக்கிறது, இனிமையாய்!
பக்குவமாய் பார்த்துப் பார்த்து நீங்கள் கட்டிய
"புதிய உயர் கல்லூரி இன்று களையிழந்து நிற்கிறது
மாணவர்களின் சத்தமின்றி ஒய்ந்து கொண்டிருக்கிறது
எப்போ நீங்கள் மீண்டும் வந்து அவ்விடத்தில் இருப்பீர்கள்?"

ஆண்டு மூன்று ஆனதம்மா நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து
உங்கள் அன்பு முகம், ஆசை வார்த்தை கேளாது
எம் செவிகள் புலனற்று உள்ளதம்மா
பார் போற்ற "இந்து நாகரீகத்தை" வளப்படுத்தினீர்!
இம் மாநிலத்தில் புகழ்பூத்த நங்கையாய் வலம் வந்தீர்
இன்று எங்களை அழவிட்டு இறைவனை நாடிச் சென்றீர்களோ

நீங்கள் மறைந்த நாள் முதலாய் நிம்மதியிழந்து, தவிக்கின்றோம்
நாமும் நம் உறவுகளும் உங்களை இழந்து கலங்கி நிற்கின்றோம்
ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் உம் நினைவுகள் எம்மை
விட்டு நீங்காது எந் நாளும் உங்களுடன் வாழும் பாக்கியத்தை
அண்ணா அடைந்துவிட்டார். உங்கள் மூவர் வரவை
எண்ணி ஏங்கிக் காத்திருக்கின்றோம் நீங்கள் வருவீர்கள் என...
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

"சண்முகநாதம்"
கட்டைப்பாலி லேன்,
ஆனைக்கோட்டை.

உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள்- சந்துதன்,சாத்வீகன்
மற்றும் நம் உறவுகள்.

(5707)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாநகர சபை

## இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், பல்பொருள் வாணிபக்கடைகள், சந்தைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் – 2026(01.01.2026 – 31.12.2026)

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி நிலையங்கள் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்வி யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

| | |
|---|---|
| கேள்விப் படிவக் கட்டணம் | - **ரூபா 1,180.00** (வற் வரியுடன்) |
| கேள்விப் படிவம் விநியோகித்தல் | - 23.10.2025 - 11.11.2025<br>**(மு.ப 9.00 - பி.ப.2.30** மணி வரை) |
| கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் | - 12.11.2025 மு.ப 10.00 மணி வரை |
| கேள்வி திறத்தல் | - 12.11.2025 மு.ப 10.00 மணிக்கு |

1. விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின நிலையத்தின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு **12.11.2025** ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும்.
2. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.
3. சந்தை சுத்திகரிப்பு பணிகளை குத்தகையாளர் தாமே பணியாளர்களை வேலைக்கமர்த்தி மேற்கொள்ள வேண்டும். ஒன்று சேர்க்கப்பட்ட தரம் பிரிக்கப்பட்ட திண்மக்கழிவுகளையும், திரவக்கழிவுகளையும் அகற்றும் பணி மாநகர சபையால் மேற்கொள்ளப்படும். இதற்கான கட்டணம் குத்தகையாளரால் செலுத்தப்பட வேண்டும்.
4. கடந்த காலங்களில் தவறுநர் எனக்கணிக்கப்பட்டுள்ளோர் அல்லது இச்சபைக்கு குத்தகையாக, வாடகை, வரியாக நிலுவையுள்ளோர் கேள்வி சமர்ப்பிக்க தகுதி அற்றவர் ஆவார். அத்தகையோர் மறைமுகமாக இன்னொருவர் ஊடாக கேள்வி சமர்ப்பிப்பது குற்றமாகும். அவ்வாறு இடம்பெறும் பட்சத்தில் அத்தகைய கேள்வி நிராகரிக்கப்பட்டு அவர்களால் செலுத்திய வைப்புப் பணங்கள் மீளளிக்கப்படமாட்டாது.
5. கேள்வி விண்ணப்பம் பெறுபவர் தேசிய அடையாள அட்டைப்பிரதி மற்றும் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராமசேவை உத்தியோகத்தரது கடிதம் என்பன சமர்ப்பிக்க வேண்டும்.
6. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கும் நிராகரிப்பதற்கும் கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு.
7. குத்தகை தொடர்பான நிபந்தனைகள் கேள்விப்படிவத்துடன் இணைக்கப்பட்டிருக்கும்.
8. கேள்வியில் சித்திபெற்றவர் குத்தகையின் **1/3** வைப்புப்பணத்தை 14.11.2025 ம் திகதி பி.ப 2.30 மணிக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும்.

| | விபரம் | கடை இல | பிணைப்பணம் | ஆரம்ப கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5.000.00 | 1,255,500.00 |
| 2 | பண்ணை கருவாட்டுக்கடை | இல.02 | 5.000.00 | 58,100.00 |
| 3 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.03 | 5.000.00 | 1,801,000.00 |
| 4 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.04 | 5.000.00 | 2,740,000.00 |
| 5 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.05 | 5.000.00 | 1,021,511.00 |
| 6 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5.000.00 | 1,200,000.00 |
| 7 | பண்ணை கோழி இறைச்சிக்கடை | இல.07 | 5.000.00 | 1,010,000.00 |
| 8 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.08 | 5.000.00 | 1,285,000.00 |
| 9 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5.000.00 | 1,601,700.00 |
| 10 | பண்ணை மாட்டிறைச்சிக் கடை | இல.10 | 5.000.00 | 1,287,000.00 |
| 11 | செங்குந்தா கருவாட்டுக் கடை | இல.01 | 5.000.00 | 141,000.00 |
| 12 | செங்குந்தா கோழி இறைச்சிக்கடை | இல.02 | 5.000.00 | 512,800.00 |
| 13 | செங்குந்தா கோழி இறைச்சிக்கடை | இல.03 | 5.000.00 | 660,000.00 |
| 14 | செங்குந்தா கோழி இறைச்சிக்கடை | இல.04 | 5.000.00 | 663,500.00 |
| 15 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல.05 | 5.000.00 | 1,075,000.00 |
| 16 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5.000.00 | 1,001,150.00 |
| 17 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5.000.00 | 705,887.02 |
| 18 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5.000.00 | 626,234.98 |
| 19 | அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5.000.00 | 71,100.00 |
| 20 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5.000.00 | 1,781,250.00 |
| 21 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்ககடை | இல.02 | 5.000.00 | 961,000.00 |
| 22 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 5.000.00 | 411,500.00 |
| 23 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 5.000.00 | 565,250.00 |
| 24 | நாவாந்துறை பல்பொருள்வாணிபக்கடை | இல.05 | 5.000.00 | 207,965.08 |
| 25 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 5.000.00 | 261,345.00 |
| 26 | நாவாந்துறை பல்பொருள்வாணிபக்கடை | இல.07 | 5.000.00 | 146,225.00 |
| 27 | நாவாந்துறை பல்பொருள்வாணிபக்கடை | இல.08 | 5.000.00 | 130,075.66 |
| 28 | நாவாந்துறை பல்பொருள்வாணிபக்கடை | இல.09 | 5.000.00 | 144,470.75 |
| 29 | நாவாந்துறை கோழி இறைச்சிக்கடை | இல.10 | 5.000.00 | 630,000.00 |
| 30 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 7.000.00 | 523,000.00 |
| 31 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 7.000.00 | 647,401.00 |
| 32 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 7.000.00 | 496,300.00 |
| 33 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 7.000.00 | 441,000.00 |
| 34 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 7.000.00 | 550,002.00 |
| 35 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 7.000.00 | 551,111.00 |
| 36 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 7.000.00 | 712,210.00 |
| 37 | குருநகர் கோழி இறைச்சிக்கடை | | 5.000.00 | 1,001,000.00 |
| 38 | பெரிய கடை மரக்கறிச்சந்தை | | 10.000.00 | 2,300,000.00 |
| 39 | பண்ணை மீன்சந்தை | | 10.000.00 | 11,500,000.00 |
| 40 | குருநகர் மீன்சந்தை | | 10.000.00 | 10,132,022.00 |
| 41 | செங்குந்தா சந்தை | | 10.000.00 | 6,278,850.00 |
| 42 | பாசையூர் மீன்சந்தை | | 2.000.00 | 582,320.00 |
| 43 | அரியாலை மீன்சந்தை | | 1.000.00 | 120,101.00 |
| 44 | நாவாந்துறை மீன்சந்தை | | 10.000.00 | 669,000.00 |

**முதல்வர்,**
**யாழ். மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(C-4166)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுகாதார அவசரநிலை; தொலைபேசி இலக்கம் அறிமுகம்

(கொழும்பு)

தற்போதைய சீரற்ற வானிலையால் ஏற்படும் சுகாதார அவசர நிலை மற்றும் வைத்திய உதவிகள் தேவைப்படுபவர்களுக்கு அறிவிக்க, அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தால் தொலைபேசி இலக்கம் ஒன்று அறி முகப்படுத்தப்பட்டுள்ளது.

24 மணி நேரமும் செயற்படும் வகையில் அந்த தொலைபேசி இலக்கம் - 077 450 6602 இந்த விசேட தொலைபேசி இலக்கம் அறி முகப்படுத்தப்பட்டுள்ளது.

சுகாதார அவசரநிலை மற்றும் வைத்திய உதவிகள் தேவைப்படுபவர்கள் எந்த நேரத்திலும் மேற்கண்ட எண்ணை அழைக்குமாறு அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது. (நி)

## கடற்றொழில் சட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடல்

(கண்டாவளை)

இலங்கையின் கடல்சார் வளங்களை பாதுகாக்கும் வகையிலும் எதிர்காலத்தில் சட்டரீதியான கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை உறுதிப்படுத்தும் வகையிலும் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த இளம் மீனவர்களுக்கான கடற்றொழில் சட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது

மெசிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி, பூநகரி, கண்டாவளை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த இளம் கடற்றொழிலாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்

கடற்றொழில் சட்டங்கள் தொடர்பிலான கருத்துக்களை கிளிநொச்சி மாவட்டத்தின் கடற்றொழில் உதவி பணிப்பாளர் எஸ். கனிஸ்ரன் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-315)

## ஒரு வருடம் ஆகியும் பிரச்சினைகளைத் தீர்க்கவில்லை
## திஸ்ஸ குட்டியாராச்சி சாடல்

(கொழும்பு)

அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் ஆகியும் வேலைவாய்ப்புப் பிரச்சினைகள், பொருளாதாரப் பிரச்சினைகள் மற்றும் இளைஞர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்தார்.

இலங்கை பொதுஜன பெரமுன கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் நேற்று இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வளர்ச்சித் திட்டங்கள் கிராமத்துக்கு செல்ல வேண்டும். அப்போது தான் பணம் கிராம மக்களுக்குச் செல்லும் என்று கூறிய அவர், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில், அதை நடைமுறையில் செய்ததாக சுட்டிக் காட்டியுள்ளார். (நி)


# INVITATION FOR BID 2025 STAGE-IV
# VALIKAMAM NORTH PRADESHIYA SABHA, KANKESANTHURAI (Kollankaladdy)

1. The **Chairman, Local Authority Procurement Committee** on behalf of the **Chairman, Valikamam North Pradeshiya Sabha, Kankesanthurai (Kollankalady)** now invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.
   **"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987."**
4. Qualification' requirements are indicated in section 4 of the **Bidding document**. Additional details are provided in the Schedule (Section 5) for SBD 3 Documents.
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the bidding documents at the same place on any working days from **2025.10.23 to 2025.11.06** in between 09:00 hrs and 15:00 hrs.
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman, Valikamam North Pradeshiya Sabha, Kankesanthurai (Kollankalady) T.P:021 2241130, Fax:021 224 3688) from 09:00 hrs to 15:00 hrs. During the period from 2025.10.23 to 2025.11.06 upon payment of non-refundable fees as mentioned in the table.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Local Authority Procurement Committee, Valikamam North Pradeshiya Sabha, Kankesanthurai (Kollankalady) on or before 10.30 a.m at 2025.11.07** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Conference Hall, Valikamam North Pradeshiya Sabha, Kankesanthurai (Kollankalady)**. commencing at **10.30 AM on 2025.10.30**
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | **Document Issuing/Purchasing Period** | | | **From 2025-10-23 To 2025-11-06** | | | | |
| | **Pre-Bid Conference** | | | **2025-10-30 at 10.30 AM** | | | | |
| | **Closing and Opening of Bids** | | | **2025-11-07 at 10.30 AM** | | | | |
| **Bid ID** | **Description of Work** | **Estimated Cost (Rs.) In Million (without VAT)** | **Contract Period (Days)** | **Grade Required** | **Non-Refundable Fee (Rs.)** | **Required Bid Security/ Bank Draft/ Security Deposit** | | **Bid Validity Period** |
| | | | | | | **Security Amount (Rs.)** | **Validity Period** | |
| NP/14/41(14)/05/02/455/CF-36/2025 | Reconstruction of Serukkapulam Road at Tellippalai | 4.20 | 90 | C8 or above (Highway) | 3,000.00 | 42,000.00 | 23/01/2026 | 26/12/2025 |
| NP/14/41(14)/05/02/456/CF-37/2025 | Reconstruction of the Suthanthirapuram Housing Scheme by Roads at Vasavilan East | 2.51 | 90 | C9 or above (Highway) | 3,000.00 | 26,000.00 | 23/01/2026 | 26/12/2025 |
| NP/14/41(14)/05/02/457/CF-38/2025 | **Package-II** 1.Construction of Vallai Chankanai Road 9th Left Lane - Mallakam 2.Construction of 1st Road 3rd Right side Road of Ikkiranai Road - Alaveddy 3.Renovaton of Alaveddy Mallakam Hindu Cemetery | 3.74 | 90 | C9 or above (Highway) | 3,000.00 | 38,000.00 | 23/01/2026 | 26/12/2025 |
| NP/14/41(14)/05/02/458/CF-39/2025 | **Package-III** 1.Renovation of Mavaikaladdy Road 2.Reconstruction of Soolampathy Vairawar Kovil Road - Tellippalai 3.Reconstruction of Poththalai Joint Road- Maviddapuram | 5.54 | 90 | C8 or above (Highway) | 3,000.00 | 55,000.00 | 20/02/2026 | 23/01/2026 |
| NP/14/41(14)/05/02/459/CF-40/2025 | **Package-IV** 1.Construction of Chettisolai Road 2nd Right Lane - Alaveddy 2.Reconstruction of Koddaikadu Road - Mallakam | 3.17 | 90 | C9 or above (Highway) | 3,000.00 | 32,000.00 | 23/01/2026 | 26/12/2025 |
| NP/14/41(14)/05/02/460/CF-41/2025 | **Pakage - V** 1. Construction of Nagaratnam Road at Thiyiddy 2. Construction of Boundary Wall at Koddupallam Hindu Cemetery - Myliddy 3. Construction of the Wing Wall for the Box Culvert at Puliyady Veethy Myliddy | 6.11 | 90 | C8 or above (Highway/ Building) | 3,000.00 | 62,000.00 | 20/02/2026 | 23/01/2026 |

**Chairman,**
**Local Authority Procurement Committee,**
**Valikamam North Pradeshiya Sabha,**
**Kankesanthurai(Kollankaladdy).**

(c-4164) **23.10.2025**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறை மரக்கறிச்சந்தை
# வெள்ளத்தில் மூழ்கியது

## வியாபாரிகள் கவலை

(கரணவாய்)

**கடும் மழை காரணமாக பருத்தித்துறை மரக்கறிச் சந்தை கட்டடத் தொகுதி வெள்ளத்தில் மிதக்கும் நிலை ஏற்பட்டதுடன் வியாபாரிகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.**

பருத்தித்துறை முதலாம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள மரக்கறிச் சந்தை வளாகத்திற்குள் அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக வீதியூடாக பாய்ந்தோடும் வெள்ள நீர் சந்தைத் தொகுதிக்குள் உட்புகுந்தது.

அத்துடன் சந்தை தொகுதி மேற்கூரை மூலம் கீழிறங்கும் மழை நீரும் சேர்ந்து சந்தை தொகுதி வெள்ளக்காடாக காட்சியளித்தது.

இதனால் வாழைப்பழ வியாபாரிகளும் மரக்கறி வியாபாரிகளும் பெரும் பாதிப்புகளை சந்தித்திருந்ததுடன் அசௌகரியங்களுக்கும் முகம்கொடுத்திருந்தனர்.

இவ்வாறு சில மணித்தியாலங்கள் மழை வெள்ளத்தின் பிடிக்குள் சிக்கிய மரக்கறி சந்தைத் தொகுதி மழை ஓய்ந்த பிற்பாடு வெள்ளம் வடிந்தோடிய பின்னரே சந்தைத் தொகுதி இயல்பு நிலைக்கு திரும்பியது.

மழை தொடர்ச்சியாக பெய்து கொண்டிருக்கும் நிலையில் இவ்வாறு வெள்ளப்பாதிப்புடன் காணப்படுவதனால் மக்களுடைய வருகையும் முற்றாகத் தடைப்பட்டு வியாபார நடவடிக்கை முற்றிலுமாகப் பாதிக்கப்படுவதாக வியாபாரிகள் கவலை தெரிவித்தனர்.

பருத்தித்துறை நகரின் மத்தியில் உள்ள நவீன சந்தைக் கட்டடத் தொகுதியில் மரக்கறி சந்தை இயங்கி வந்த நிலையில் தற்போதைய இடத்தில் புதிய சந்தை தொகுதியை அமைத்து இடம் மாற்றுவதற்கு நகர சபை செயலாளர் நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-60)



வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராக சாம்பசிவம் சுதர்சன், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கான நியமனக் கடிதத்தை வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் வைத்து ஆளுநர் நேற்று புதன்கிழமை வழங்கி வைத்தார். இந்த நிகழ்வில் ஆளுநரின் செயலாளர் எஸ்.சத்திய சீலனும் கலந்துகொண்டார்.

# சாவகச்சேரி நகரசபையின் வீதிப்புனரமைப்பு ஆரம்பம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் நுணாவில் வட்டாரத்தின் தேவாலய வீதியின் புனரமைப்பு வேலைத்திட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.


நகரசபை உறுப்பினர் மு.கோகுல்றாஜ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நகராட்சி மன்ற உபதவிசாளர் ஞா.கிஷோர் கலந்து கொண்டு புனரமைப்பு பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

நுணாவில் மற்றும் மறவன்புலவு கிராமங்களை இணைக்கின்ற வீதியாக மேற்படி வீதி காணப்படுகின்றது.

அத்துடன் கொல்லங்கராய் இந்துமயானத்திற்கும், விவசாயிகள் வயல்நிலங்களுக்கும் பயணிக்கின்ற இப் பிரதான வீதி நீண்டகாலமாக சேதமடைந்து காணப்பட்டது.

இந்நிலையில் நகராட்சி மன்றத்தின் சுமார் 6.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வீதி மற்றும் அதனோடு இணைந்த குளக்கரைக் கட்டு என்பன புனரமைப்பு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-30)

# நாவற்குழி மகாவித்தியாலயத்தில் விழிப்புணர்வு நிகழ்வு



(சாவகச்சேரி)

"போதைகள் அற்ற மேதைகள் சமூகத்தை உருவாக்குவோம்" எனும் தொனிப்பொருளில் அண்மையில் யா/நாவற்குழி மகாவித்தியாலயத்தில் மாணவர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

போதைப்பொருள், தற்கொலை, வீடியோ கேம் போன்ற சமூக விரோதச் செயற்பாடுகளுக்குள் மாணவர்கள் சிக்கிக் கொள்ளாமல் இருக்கும் முகமாக மேற்படி விழிப்புணர்வுச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் உறுப்பினர் ம.நடனதேவனின் கோரிக்கைக்கு அமைவாக சாவகச்சேரிப் பிரதேசசபையின் உபதவிசாளர் இ.யோகேஸ்வரனின் ஏற்பாட்டில் மேற்படி விழிப்புணர்வுச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த விழிப்புணர்வுச் செயற்றிட்டத்தை சாவகச்சேரிப் பொலிஸ் நிலைய பல்வகை முறைப்பாட்டுப் பிரிவு பொறுப்பதிகாரி க.ஜெயரூபன் முன்னெடுத்திருந்தார். (8-30)



யாழ்ப்பாணம், காங்கேசன்துறை ஐயனார் ஆலய வடக்கு வீதியில் பொது வழிபாட்டிற்காக புதிதாக அமைக்கப்பட்ட சிவனின் சன்னிதானத்திற்கு குடமுழுக்கு வைபவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றது. (படம்:-சிவசாந்தன்)



ஊரெழு கணேச வித்தியாசாலையில் மாணவர்களால் ஆக்கப்பட்ட ஏழு கையெழுத்து சஞ்சிகைகளின் வெளியீட்டுவிழா அதிபர் இரா.ஜெயக்குமார் தலைமையில் கடந்த 16 ஆம் திகதி நடைபெற்றது.



யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலின் ஒன்பதாம் ஆண்டு தொடக்கவிழா அதன் தலைவர் பேராசிரியர் சி. முருகானந்தவேல் தலைமையில், கடந்த 15 ஆம் திகதி அறிவுத்திருகோவில் மண்டபத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் [illegible] சொற்பொழிவாளர் சொல்வேந்தர் சுகி சிவம் கல்ந்து கொண்டு சிறப்பு சொற்பொழிவாற்றினார். விழாவில் வடமாகாண ஆளுநர் நா. வேதநாயகன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலும் குறைவடைந்த தங்கத்தின் விலை

(கொழும்பு)

24 கரட் தங்கப் பவுண் ஒன்றுக்கு 25,000 ரூபாயால் குறைந்துள்ளதாக, இலங்கை நகைக்கடை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை 24 கரட் தங்கப் பவுண் ஒன்று 375,000 ரூபாயாக விற்பனை செய்யப்பட்ட நிலையில், நேற்று 24 கரட் தங்கப் பவுண் ஒன்று 350, 000 ரூபாயாக விற்பனை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், தற்போதைய தங்க விலை நிலவரப்படி, 24 கரட் தங்கப் பவுண் ஒன்று 350,000 ரூபாயாக விற்பனை செய்யப்படுகிறது. (நி)

## 132 தனியார் பேருந்து நடத்துநர்களுக்கு
# விதிக்கப்பட்ட அபராதம்

(கொழும்பு)

பயணிகளுக்குப் பயணச் சீட்டு வழுங்கத் தவறியதற்காக 132 தனியார் பேருந்து நடத்துநர்கள் மீது மேல் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

அத்துடன், செல்லுபடியாகும் பயணச் சீட்டுகள் இன்றிப் பயணம் செய்த 9 பயணிகளுக்கும் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், வாகனத்தைச் செலுத்தும் போது தொலைபேசியை பயன்படுத்துதல், உரிமம் இல்லாமல் பேருந்தை இயக்குதல் மற்றும் போலி ஆவணங்கள் வைத்திருத்தல் உள்ளிட்ட விதிமுறைகளை மீறியதற்காக 228 சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அவர்களின் சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன், கட்டாய மறுபயிற்சி மேற்கொள்ளுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும் பயணச் சீட்டு வழங்கும் முறை இந்த மாதத்தின் 1 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, விதிமுறைகளை அமுல்படுத்தத் தொடர்ச்சியான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (நி)

# கெஹெல்பத்தர பத்மேயின்
# 50 மில்.சொத்துகள் பறிமுதல்

(கொழும்பு) ..................

**கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வரும் "கெஹெல்பத்தர பத்மே" என்ற பாதாள உலக குற்றவாளியின் ரூ.50 மில்லியன் மதிப்புள்ள சொத்துக்கள் கைப்பற்றப்பட்டுள்ளது.**



குறித்த சட்டவிரோத சொத்துக்கள் புலனாய்வுப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இந்தோனேசியாவில் தலைமறைவாக இருந்த போது, பாதாள உலக குற்றவாளிகளான கெஹல்பத்தர பத்மே, கமாண்டோ சலிந்த, பெக்கோ சமன் மற்றும் தெம்பிளி லஹிரு ஆகியோர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இலங்கையில் இருந்து இந்தோனேசியா புறப்பட்ட உதவி காவல் கண்காணிப்பாளர் ரோஹன் ஒலுகல மற்றும் உதவி காவல் கண்காணிப்பாளர் மஹிந்த ஜெயசுந்தர ஆகியோரின் தலைமையில் இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிலையில், குறித்த சந்தேகநபர்களை கொண்டு வந்து விசாரித்ததில் நாட்டில் செயற்பட்டு வந்த பாரிய போதைப்பொருள் வலையமைப்பு மற்றும் கொலை குற்றங்கள் தொடர்பான பயங்கரமான உண்மைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

மேலும், அண்மையில் பத்மே வழங்கிய தகவலின் பேரில் தேடப்பட்டு வந்த முக்கிய குற்றவாளியான இஷாரா செவ்வந்தியும் நேபாளத்தில் வைத்து கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 27 . 05 . 1944 | 20 . 10 . 2025 |

## அமரர். ஐயாத்துரை கணேசலிங்கம்
### (ஆனந்தி V.A.K)

கோண்டாவில் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை கணேசலிங்கம் அவர்கள் 20.10.2025 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் முத்தாவரணம் தம்பதியரின் அன்பு மருமகனும் சரோஜினிதேவியின் அன்புக் கணவரும் தர்சிகா, துஷாந்தன் (ஜேர்மனி), சுஜீலன் (இலங்கை மின்சாரசபை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 23.10.2025 இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.30 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஞானவைரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு.

(1670)

தகவல்
குடும்பத்தினர்.

# கிண்ணியாவில் நிலத் தகராறு
# 30 மாடுகள் மீது வாள்வெட்டு

(திருமலை)

மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக கிண்ணியா பிரதேசத்தில் நிலவும் கால் நடை வளர்ப்பாளர்களுக்கும் வேளாண்மை விவசாயிகளுக்கும் இடையேயான நீண்டகால நில மீட்புப் போராட்டத்தின் உச்ச கட்டமாக,30 மாடுகள் வாள் வெட்டுக்கு இலக்காகியுள்ள சம்பவம் அப்பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கிண்ணியா குரங்குபாஞ்சான் இரட்டைக்குளம் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் காலை இச் சம்பவம் நிகழ்ந்துள்ளதாக கிண்ணியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக, கிண்ணியா பிரதேச கால்நடை விவசாயிகளுக்கும் வேளாண்மை விவசாயிகளுக் கும் இடையிலான நில மீட்புப் போராட்டம் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறது.

சுமார் 2876 ஹெக்டேயர் நிலம் மேய்ச்சல் தரைக்கு உரியது என மேன் முறை யீட்டு நீதிமன்றம் கடந்த மே மாதம் 28 ஆம் திகதி தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்பானது, கால் நடைகளுக்கு மேய்ச்சல் தரையின்றிப் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வந்த கிண்ணியா கால் நடை விவசாயிகளுக்கு வாழ்வில் விடிவை ஏற்படுத்தியிருப்பதாக அவர்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

எனினும், இத்தீர்ப்பைத் தொடர்ந்து, கிண்ணியா மற்றும் குறிஞ்சாக்கேணி கமநல சேவை நிலையங்களில் பதிவு செய்யப்பட்ட விவசாயிகள், தங்களுக்குரிய விவசாய நிலங்களில் பயிர் செய்வதற்கு விதிக்கப்பட்ட தடையை நீக்கித் தொடர்ந்து விவசாயம் செய்ய அனுமதிக்குமாறு கோரி தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.


உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு இணங்க, நீதிமன்றத்தால் அடையாளப்படுத்தப்பட்ட குறித்த பகுதிக்குள் விவசாயிகளை வேளாண்மை செய்ய அனுமதிக்க வேண்டாம் என கமநல சேவை திணைக்களங்களுக்கு கிண்ணியா பிரதேச செயலாளரால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிலையிலேயே இரு தரப்பினருக்கும் இடையில் தொடர்ந்து முரண்பாடு ஏற்பட்டு வருகின்ற நிலையில் இந்த பின்னணியில் நேற்று முன்தினம் 30 மாடுகள் வாள் வெட்டுக்கு இலக்காகியுள்ள சம்பவம் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

## வாழ்த்து தெரிவித்த நெதன்யாகுவுக்கு நன்றி தெரிவித்த மோடி



(டில்லி)


தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் வாழ்த்துக்களுக்கு பிரதமர் மோடி நன்றி தெரிவித்தார்.

மேலும், இஸ்ரேல் பிரதமரின் பிறந்த நாளுக்கு தனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

இதேவேளை, உங்களுக்கு நல்ல ஆரோக்கியம் மற்றும் வெற்றி கிடைக்க வாழ்த்துகிறேன் எனவும் வரும் ஆண்டுகளில் இந்தியா - இஸ்ரேல் இடையே உறவு செழிக்கட்டும் என் றும் பிரதமர் மோடி கூறியுள்ளார். (நி)

# நெதன்யாகுவை கை

# கனடாவின் அறிவிப்பால் அ



(ஒட்டாவா) — சர்வதேச குற்றவி... தின் பிடியாணைக்க... பிரதமர் பெஞ்சமின் ... கைது செய்வதாக ... மார்க் கார்னி, வெ... பேசு பொருளாகிய...

இந்நிலையில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் பிடியாணை உத்தரவு தொடர்பில் கார்னி வெளியிட்ட தனது உறுதி மொழியைக் கைவிடுமாறு இஸ்ரேல் வலியுறுத்தியுள்ளது.


கடந்த வாரம் வெளியிடப்பட்ட பத்திரிகை ஒன்றின் நேர்காணலில், நெதன்யாகு கனடாவுக்கு வந்தால் போர்க் குற்றச்சாட்டில் கைது செய்வதாகஅந்நாட்டு முன்னாள் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அளித்த உறுதிமொழியை நிறைவேற்றுவீர்களா என கேள்வி எழுப்பப்பட்டது.

இந்நிலையில் இதற்கு பதில் வழங்கிய கார்னி “ஆம்” என்று பதிலளித்திருந்தார்.

இதன்படி குறித்த கருத்தானது இஸ்ரேலியத் தரப்புக்கு தற்போது அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து இஸ்ரேலிய அரசாங்க செய்தித் தொடர்பாளர் ஷோஷ் பெட்ரோசியன் கருத்து வெளி... மறுப்ப... கிழக்க... மற்றும்... வரான... கனட... டும் எ... கா... குற்ற...

## போலந்து வான்வெளியை புடின் பயன்படுத்தக்கூடாது!



(மொஸ்கோ)

ஹங்கேரிக்கு செல்லும் வழியில், ரஷ்ய ஜனாதிபதி புடின் தங்கள் நாட்டு வான் வெளி வழியாக பறந்தால் கைது செய்யப்படுவார் என போலந்து எச்சரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்புடன் ஹங்கேரியில் நடைபெறும் உச்சி மாநாட்டில் ரஷ்ய ஜனாதிபதி புடின் பங்கேற்க இருக்கிறார். அப்போது இரு நாட்டுத் தலைவர்களும் உக்ரைன் உடனான போரை முடிவுக்கு கொண்டு வருவது குறித்து முக்கிய பேச்சு நடத்த இருக்கின்றனர். இந்த சூழலில், ஹங்கேரியில் நடைபெறும் உச்சிமாநாட்டிற்காகத் தனது வான்வெளி வழியாக ரஷ்ய ஜனாதிபதி புடின் பயணிக்கக் கூடாது என்று போலந்து எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து, போலந்து வெளியுறவு அமைச்சர் ராடோஸ்லாவ் சிகோர்ஸ்கி கூறியதாவது: ஹங்கேரிக்கு செல்லும் வழியில் புடின் தனது வான்வெளியை பயன்படுத்தக் கூடாது. மீறி பயன்படுத்தினால், சர்வதேச கைது வாரண்டை நிறைவேற்ற வேண்டிய கட்டாயம் ஏற்படும். அவர் கைது செய்யப்படுவார்.

இந்த உச்சிமாநாடு நடைபெற வேண்டுமானால், விமானம் வேறு பாதையைப் பயன்படுத்தும் என்று நம்புகிறோம். தாக்குதல்கள் தொடர்வதால், புடினின் விமானம் தரையிறக்கப் படலாம் என அவர் கூறினார். உக்ரைனில் ரஷ்யா தொடர்ந்து ட்ரோன் தாக்குதல் நடத்தி வருகிறது. போலந்து வான்வெளியில் அத்துமீறி நுழைந்த ரஷ்ய ட்ரோன்களை அந்நாட்டு இராணுவம் சுட்டு வீழ்த்தியது என்பது குறிப்பிடத்தக்கது.

## ட்ரம்ப் - புடின் பேச்சுவார்த்தை திடீர் ரத்து செய்யப்பட்டது!

(வோஷிங்டன்)

ரஷ்ய ஜனாதிபதி புடின், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் இடையே நடைபெற இருந்த சந்திப்பு திடீரென ரத்து செய்யப்பட்டுள்ளது.

ரஷ்யா, உக்ரைன் நாடுகள் இடையேயான போர், 3 ஆண்டுகளைக் கடந்தும் நீடித்து வருகிறது. இவ்விரு நாடுகளுக்குமிடையே அமெரிக்கா மத்தியஸ்தம் செய்து வந்த போதிலும் போர் முடிவுக்கு வரவில்லை.

ஆக.15ஆம் திகதி ரஷ்ய ஜனாதிபதி புடினை, ட்ரம்ப் சந்தித்துப் பேசினார். அலாஸ்காவில் நடைபெற்ற இந்த பேச்சுவார்த்தையில் எவ்வித உடன்பாடும் எட்டப்படவில்லை. போர் நிறுத்தம் பற்றிய எந்த அறிவிப்பும் வெளியிடப்படவில்லை.

அண்மையில் வோஷிங்டனில் ட்ரம்பை, உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி சந்தித்துப் பேசினார். இதைத் தொடர்ந்து புடினை நேரில் சந்திக்க உள்ளதாக ட்ரம்ப் தெரிவித்து இருந்தார். இவர்களின் சந்திப்பு ஹங்கேரி நாட்டில் உள்ள புடாபெஸ்ட் நகரத்தில் நடப்பதாக இருந்தது.

இந் நிலையில், திடீ ரென இந்த சந்திப்பு தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளது.

இந்த விவரத்தை வெள்ளை மாளிகை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ் ரோவ் மற்றும் அமெரிக்க வெளியுறவு செயலாளர் மார்கோ ரூபியோ இடையே நடைபெற்ற தொலைபேசி உரையாடலைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அவர்கள் கூறியுள்ளனர். அவர்கள் என்ன பேசினார்கள் என்பது குறித்து பொதுவெளியில் எதையும் தெரிவிக்க முடியாது என்றும் வெள்ளை மாளிகை அதிகாரிகள் தெரிவித்து இருக்கின்றனர்.

இருநாடுகளின் ஜனாதிபதிகளின் சந்திப்பின் போது உக்ரைனுடனான போர் குறித்து இறுதிக்கட்ட முடிவு எடுக்கப்படும் என்று எதிர் பார்க்கப்பட்டு இருந்தது. தற்போது பேச்சுவார்த்தை ரத்து செய்யப்பட்டு உள்ளதால், உக்ரைன் போருக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்ற ட்ரம்பின் எதிர்பார்ப்பு கைகூட வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (நி)




இ... அ... (வே... இ... அமெ... 50%... ஆகக்... காலம... ஒப்ப... நிலை... வும் இ... அ... யப்ப... எரிச்... களில்... ர... ணை... படிப்... விவா... யங்க... எரிச்... ளாவி... கட்டு... முயற்... பே... அறிவி... வார்த்... இருப்... யில் ந... உச்சி... ந்தன...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ... கைது செய்வேன்!

## ...ல் அதிருப்தியில் இஸ்ரேல்



...ற்றவியல் நீதிமன்றத் ...ணக்கமைய இஸ்ரேல் ...சுமின் நெதன்யாகுவை ...தாக கனடா பிரதமர் ... வெளியிட்ட அறிவிப்பு ...ாகியுள்ளது.

... வெளியிடுகையில் "கார்னி இதை மறுபரிசீலனை செய்து, மத்திய கிழக்கில் உள்ள ஒரே யூத அரசு மற்றும் ஜனநாயக நாட்டின் தலைவரான பிரதமர் நெதன்யாகுவை கனடாவிற்கு வரவேற்க வேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம்.

காசா மோதலில் போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களுக்காக நெதன்யாகுவுக்கு ஐ.சி.சி கடந்த ஆண்டு பிடியாணையை பிறப்பித்தது.

எனினும் நீதிமன்றத்தின் அதிகார வரம்பை நிராகரித்து காசாவில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்களை இஸ்ரேல் மறுக்கிறது.

பாலஸ்தீன அரசை அங்கீகரிப்பதற்கான கனடாவின் முடிவு "பயங்கரவாதத்திற்குக் கிடைத்த பரிசு". அது "கனடாவில் யூத எதிர்ப்புத் தீயில் எண்ணெய் ஊற்றியுள்ளது" என்றும் பெட்ரோசியன் கூறியுள்ளார். (நி)

## வெள்ளை மாளிகையில் தீபாவளி கொண்டாடிய ட்ரம்ப்



(வோஷிங்டன்)

கடந்த 20 ஆம் திகதி தீபாவளிப் பண்டிகை கோலாகலகமாக கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் புத்தாடை அணிந்து கோயில்களுக்குச் சென்று வழிபாடு மேற்கொண்டுவரும் மக்கள், பட்டாசுகளை வெடித்து பண்டிகையை உற்சாகமாகக் கொண்டாடினர்.

தமிழர்கள் அதிகளவில் வாழும் அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியா மாகாணத்தில் தீபாவளிப் பண்டிகைக்கு இந்தாண்டு அதிகாரபூர்வ விடுமுறை அளிக்கப்பட்டது.

இந்நிலையில், வெள்ளை மாளிகையில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் விளக்கேற்றி தீபாவளி கொண்டாடினார்.

இது தொடர்பான வீடியோவை வெள்ளை மாளிகை பகிர்ந்துள்ளது.

தீபாவளி விழாவில் FBI இயக்குநர் காஷ் படேல், தேசிய புலனாய்வு இயக்குநர் துளசி கப்பார்ட், வெள்ளை மாளிகை துணைப் பத்திரிகை செயலாளர் குஷ் தேசாய், அமெரிக்காவுக்கான இந்திய தூதர் வினய் மோகன் குவாட்ரா மற்றும் டெல்லிக்கான வோஷிங்டன் தூதர் செர்ஜியோ கோர் உள்ளிட்ட முக்கிய அதிகாரிகள் கலந்து கொண்டனர். (நி)

## இந்திய இறக்குமதிகள் மீதான வரிகளை அமெரிக்கா குறைக்க வாய்ப்பு

(வோஷிங்டன்)

இந்தியப் பொருட்களுக்கான அமெரிக்க வரிகளை தற்போதைய 50% இலிருந்து சுமார் 15-16% ஆகக் குறைக்கக்கூடிய நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்யும் நிலையில் இந்தியாவும் அமெரிக்காவும் இருப்பதாக கூறப்படுகிறது.

அறிக்கையின்படி, முன்மொழியப்பட்ட ஒப்பந்தம் முக்கியமாக எரிசக்தி மற்றும் விவசாயத் துறைகளில் கவனம் செலுத்துகிறது.

ரஷ்யாவிலிருந்து மசகு எண்ணெய் இறக்குமதியை இந்தியா படிப்படியாகக் குறைப்பது குறித்து விவாதிக்கப்படும் முக்கிய விடயங்களில் ஒன்றாகும். இது ரஷ்ய எரிசக்தி விநியோகங்களை உலகளாவிய அளவில் சார்ந்திருப்பதைக் கட்டுப்படுத்தும் வோஷிங்டனின் முயற்சிகளுடன் ஒத்துப்போகிறது.

பேச்சுவார்த்தைகளை நன்கு அறிந்த அதிகாரிகள், பேச்சுவார்த்தைகள் இறுதி கட்டத்தில் இருப்பதாகவும், இந்த மாத இறுதியில் நடைபெறவிருக்கும் ஆசியான் உச்சி மாநாட்டிற்கு முன்னர் ஒப்பந்தத்தை முடிக்க இரு தரப்பினரும் பணியாற்றி வருவதாகவும், அங்கு முறையான அறிவிப்பு வெளியிடப்படலாம் என்றும் தெரிவித்துள்ளனர்.

இந்த வார தொடக்கத்தில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இடையே நடந்த தொலைபேசி உரையாடலுக்குப் பின்னர் இந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஒப்பந்தம் முடிவடைந்தால், 2020 இல் கட்டண வேறுபாடுகள் காரணமாக பேச்சுவார்த்தைகள் முடங்கியதிலிருந்து இந்தியா-அமெரிக்க வர்த்தக உறவுகளில் மிக முக்கியமான முன்னேற்றத்தைக் குறிக்கும்.

இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தக பங்காளிகளில் ஒன்றாக அமெரிக்கா தொடர்ந்து உள்ளது. அண்மைய ஆண்டுகளில் இருதரப்பு வர்த்தகம் 200 பில்லியன் டொலர்களைக் கடந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

## உகண்டாவில் கோர விபத்து 63 பேர் உயிரிழப்பு!


(உகண்டா)

உகண்டாவின் மிகவும் பரபரப்பான நெடுஞ்சாலைகளில் ஒன்றில் இரண்டு பேருந்துகள் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் குறைந்தது 63 பேர் உயிரிழந்ததுடன், பலர் காயமடைந்தனர் என்று பொலிஸார் நேற்று புதன்கிழமை தெரிவித்தனர்.

தலைநகர் கம்பாலாவிற்கும் வடக்கு நகரமான குலுவிற்கும் இடையிலான நெடுஞ்சாலையில் நள்ளிரவுக்குப் பின்னர் இந்த விபத்து நிகழ்ந்தது.

எதிர் திசைகளில் இருந்து வந்த இரண்டு பேருந்துகள், ஒரு லொறி பிறிதொரு வாகனத்தை முந்திச் செல்ல முயன்றதால் இந்த விபத்து ஏற்பட்டதாக ஆரம்ப விசாரணைகள் தெரிவிக்கின்றன. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டத்தரணிகள்,வைத்தியர்களின் ஸ்டிக்கர் அகற்றப்படாது

## சபையில் அமைச்சர் நளிந்த



(கொழும்பு)

சட்டத்தரணிகள் மற்றும் வைத்தியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கார் பாஸ் ஸ்டிக்கர்களை அகற்றுவது தொடர்பாக எந்த தீர்மானமும் எடுக்கப்பட வில்லையென சுகாதார அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ நேற்று பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

சபையில் உரையாற்றிய அமைச்சர் ஜெயதிஸ்ஸ, மோட்டார் போக்குவரத்து மற்றும் பொலிஸ் உட்பட அரசாங்கத்தால் அத்தகைய எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

வைத்தியர்களை அடையாளம் காணவும், மருத்துவமனைகளுக்கு எளிதாகச் செல்லவும் கார் பாஸ்கள் வழங்கப்படுகின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

"அரசாங்கம் அத்தகைய எந்த அடையாள ஆவணத்தையும் நீக்க எதிர்பார்க்கவில்லை" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் விதமாக சுகாதார அமைச்சர் இந்தக் கருத்துக்களை தெரிவித்தார். (ஙி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1993- இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி-பா- 20<br>உயரம்: 6"<br>தகைமை/தொழில்:DIP IN IT,SHOP<br>எதிர்பார்ப்பு:அரச/தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/16165 | பிறப்பு-2000-இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: Assistant Pharmacist<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/16001 |
| பிறப்பு:1988-இந்து<br>நட்சத்திரம்:உத்தரம்<br>கி-பா:37<br>உயரம்:5'2"<br>தகைமை/தொழில்-BSC,Nurse(UK)<br>எதிர்பார்ப்பு:படித்த தகுதியான பெண்<br>தொ.இ: B/16166 | பிறப்பு-1998- இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 11 இல் சூரி செவ்<br>கி.பா: 1 1/2<br>உயரம்:5'1"<br>தகைமை/தொழில்:BA<br>எதிர்பார்ப்பு: தகுந்த வரன்<br>தொ.இ: G/16003 |
| பிறப்பு:1990-இந்து<br>நட்சத்திரம்:பூரட்டாதி<br>கி-பா- 10 3/4<br>உயரம்:5'3"<br>தகைமை/தொழில்: A/L,Work(pvt)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16167 | பிறப்பு-1998- இந்து<br>நட்சத்திரம்-பூசம்<br>கி.பா-26 1/2<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BBM<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு , தகுந்த வரன்<br>தொ.இ: G/16004 |
| பிறப்பு: 1988- இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி-பா-33 1/4<br>உயரம்:5'8" 12 இல் செவ்<br>தகைமை/தொழில்: BSC, IT Executive (pvt)<br>எதிர்பார்ப்பு:அரச/தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/16168 | பிறப்பு -1998 -இந்து<br>நட்சத்திரம் - அத்தம் 11 இல் சூரி செவ்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: BSc,Software Engineer<br>எதிர்பார்ப்பு: Engineer, IT Field, சைவபோசனம்<br>தொ.இ: G/16005 |
| பிறப்பு:1990 - இந்து<br>நட்சத்திரம் :பூரட்டாதி<br>கி-பா- 49 ¾ 7 இல் செவ்<br>உயரம்:5"7"<br>தகைமை/ தொழில்:BSC(IT), MBA, WORK(PVT)<br>எதிர்பார்ப்பு:அரச/தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/16169 | பிறப்பு-1996-RC<br>நட்சத்திரம்:அத்தம்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BBA,Executive Manager<br>எதிர்பார்ப்பு:அரச/தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/16007 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 466

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## செயற்கைப் பூச்சிகள்!

ஒரு சின்ன எறும்பு. தன்பாட்டிற்கு பேசாமல் இருந்தது ஒரு இடத்திலே.

அது இருக்கிற இடத்தைத் தாண்டி யாராவது போனால் திடீர் என்று ஓடிவந்து தாக்குது... விரட்டுது... இது எப்படி சாத்தியம்?

விடயம் என்னவென்றால் அது நிஜமான எறும்பு இல்லை. செயற்கை எறும்பு! அது ஒரு ரோபோட்!

அமெரிக்காவிலே உள்ள மாசசூஸெட்ஸ் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி...

அங்கே உள்ள ஆய்வுக் கூடத்திலேதான் இதுமாதிரி செயற்கைப் பூச்சிகளை உருவாக்கிறார்கள்!

இவர்கள் உருவாக்கியிருக்கிற செயற்கை எறும்புக்கு ஜென்கிஸ் - என்று பெயர்.

இந்த ரோபோட் எறும்பு... கொஞ்சம் கூட செயற்கைத்தனம் இல்லாமல் இயற்கையாக சாதாரணமாகப் போகிறது... வருகிறது! நடக்கிறது. திரும்புகிறது... முன்னால் போறவரைத் தாக்கிறது.

ஒரு பெரிய கம்பயூட்டருக்குப் பதிலாக... ஒரு சின்ன மைக்ரோ புராசசர் இந்தப் பணிகளைச் செய்யிறதினால் இதைப் பார்க்கிறதற்கு ஒரு உயிருள்ள எறும்பு மாதிரியே இருக்கு.. அது மாதிரியே வேலை செய்கிறது.

இதுமாதிரி எறும்பு மட்டும் இல்லை...•எத்தனையோ விதமான பூச்சிகளை அங்கே உள்ளே விஞ்ஞானிகள் உருவாக்குகிறார்கள்... எதுக்காக?

வீட்டு வேலைகள் செய்வதற்காக! அறுவைச் சிகிச்சைகள் செய்வதற்காக! செவ்வாய் கிரகத்துக்குப் போய் ஆராய்ச்சி செய்வதற்காக!

இங்கே உள்ள விஞ்ஞானிகளின் முக்கியமான நோக்கம் என்ன தெரியுமா?

ஒரு செயற்கையான உயிரை... இரும்பு உடம்புகளுக்குக் கொடுக்கிறது! அதுகளை இந்த உலகத்திலே உலவ விடுவது!

அது மூலமாக ஆக்கபூர்வமான பணிகளைச் செய்வது! அதுதான் குறிக்கோள்.

முதலிலே அவர்கள் உருவாக்கியதற்குப் பெயர் ஆலன். அது ஒரு துடைப்பம் Vaccuum Cleaner.

இது சாவி குடுத்த பொம்மை மாதிரி.. சுவரிலே உள்ள ஓட்டடைகளை சுத்தம் செய்யும்... கதவுகிட்டபோகும்... அதிலே உள்ள தூசுகளைத் துடைக்கும். அவ்வளவுதான்!

அந்த ஆய்வுகூடத்திலே தயாரான இரண்டாவது ரோபோட் - ஹெர்பெர்ட்!

இதுக்கு வேலை என்ன தெரியுமா?

அந்த ஆய்வுகூடத்துலே அங்கங்கே இருக்கிற காலியான சோடா போத்தல்களை சேகரிச்சிக்கொண்டு வருவது!

இதுமாதிரி இயந்திரப் பூச்சிகளை அனுப்பி சந்திரனிலேயும் செவ்வாய் கிரகத்திலேயும் ஆய்வுகள் நடத்தலாம் என்று யோசிக்கிறார்கள்.

அதுக்காகவே இவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால் இந்த இயந்திரப் பூச்சிகளின் ஒவ்வொரு பகுதியையும் மிகவும் நுணுக்கமா தயாரிக்கிறார்கள்.

நுண்ணிய உணர்திறன் கொண்டதாக செய்கிறார்கள். நுணுக்கமாக செய்திகளைச் சேகரிக்கிற வகையிலே வடிவமைக்கிறார்கள்.

ஜென்கிஸ் என்கிற எறும்பு இந்த வகையிலேதான் வடிவமைக்கப்பட்டிருக்கு!

அட்டிலா என்கின்ற சக்திவாய்ந்த ரோபோட்டையும் விண்வெளி ஆய்வுக்காக வடிவமைத்திருக்கிறார்கள்!

"ஒவ்வொரு கம்ப்யூட்டர் சில்லும் எழுந்து நடக்க வேண்டும்.. அதுதான் எங்களுடைய கனவு. அந்தக் கனவு விரைவில் நனவாகும்!" என்கிறார்அங்கே உள்ள ஒரு விஞ்ஞானி.

நம்ம எறும்புகளைப் பற்றி ஒரு கதை உண்டு. அதாவதுஒரு பெரிய யானை மிரண்டு போய் ஓடிவந்து கொண்டு இருந்துதாம்.

-வழியிலே ஒரு சின்ன எறும்பு நின்று கொண்டிருந்தது. அது அந்த யானையைப் பார்த்து "ஏன் இப்படிப் பயந்து ஓடிவந்து கொண்டிருக்கிறாய் என்று கேட்டது.


அதற்குஅந்த யானை சொல்லியது "ஒரு பூனை என்னை துரத்திக் கொண்டு வருகிறது. அதுதான்பயந்து ஓடிவந்து கொண்டிருக்கிறேன் என்றது.

அதற்கு இந்த எறும்பு சொல்லியதாம். "அதுக்காகவா பயப்படுகிறாய் இனிமேல் பயப்படாதே. பேசாமல் என் பின்னால் வந்து ஒளிந்து கொள்! என்றதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் ஏற்பாட்டில் கடந்த 20 ஆம் திகதி திங்கட்கிழமை ஆலய வளாகத்தில் பரிசளிப்பு விழா மற்றும் தீபாவளி நிகழ்வுகள் ஆயிலடி வீரகத்தி விநாயகர் அறநெறிப் பாடசாலை அதிபர் வி.மயூரன் தலைமையில் இடம்பெற்றன. (படம்:சுபேசன்)



வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனை, 51ஆவது காலாட் படைப்பிரிவின் தளபதியாக புதிதாகப் பதவியேற்ற மேஜர் ஜெனரல் ரிஸ்வி ரசிக், ஆளுநர் செயலகத்தில் நேற்று புதன்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினார்.





அருள்மிகு திருவண்ணை கன்னாதிட்டி காளியம்பாள் ஆலயம் மற்றும் அருள்மிகு இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் கேதார கௌரி விரத பூஜைகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது.

# கனகம்புளியடி-யாக்கரை வரையான வீதி தற்காலிகமாக மூடப்படுகிறது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி புலோலி வீதியில் கனகம்புளியடியில் இருந்து யாக்கரை வரையான வீதி தற்காலிகமாக மூடப்படுகின்றது.

இவ் வீதியில் உள்ள 14/2 பாலத்தின் அமைக்கப்பட்ட தற்காலிக வீதியில் அவசர திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படுவதன் காரணமாக இன்றிலிருந்து ஒரு வாரத்திற்கு இவ் வீதி தற்காலிகமாக மூடப்படுகின்றது.

இதனால் பொதுமக்களுக்கு ஏற்படும் சிரமங்களிற்கு வருந்துகின்றோம். இக்காலப்பகுதியில் மாற்றுப்பாதைகளை பயன்படுத்துமாறு யாழ்.வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதான பொறியியலாளர் அறிவித்துள்ளார். (8)

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 160 | 300 | 200 | 150-200 | 120 |
| உருளைக்கிழங்கு | 220 | 210 | 200 | 240 | -- | 220 |
| பச்சைமிளகாய் | 250 | 250 | 200 | 250 | 220 | 180 |
| தக்காளி | 300 | 240 | 200 | 300 | 240 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 300 | 140 | 200 | 80 |
| கோவா | 200 | 200 | 250 | 200 | 140 | 140 |
| கரட் | 250 | 250 | 250 | 250 | 200 | 150 |
| பூசணி | 80 | 60 | 80 | 60 | 50 | 30 |
| புடோல் | 300 | 200 | 300 | 250 | -- | -- |
| வாழைக்காய் | 150 | 80 | 150 | 150 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 250 | 200-300 | 250 | 300 | 150-220 | 210 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 150 | 200 | 160 | 145 |
| பாகற்காய் | 500 | 500 | 500 | 600 | 450 | 250 |
| வெண்டக்காய் | 150 | 200 | 150 | 300 | 200 | 110 |
| கருணைக் கிழங்கு | 350 | 200 | 200 | 300 | 200 | 220 |
| பயற்றங்காய் | 350 | 400 | 400 | 400 | 400 | 300 |
| லீக்ஸ் | 250 | 250 | 250 | 250 | 160 | 120 |
| பீற்றூட் | 160 | 120 | 180 | 180 | 100 | 100 |
| கறிமிளகாய் | 300 | 450 | 400 | 400 | 400 | 280 |
| முருங்கைக்காய் | 250 | 200 | 300 | 200 | 150 | 125 |
| போஞ்சி | 400 | 450 | 500 | 450 | 350 | 300 |
| கத்தரிதம்புள்ள | 150 | 120 | 200 | 180 | -- | -- |
| கீரை - 1 பிடி | 150 | 60-140 | 150 | 80 | -- | -- |
| தேசிக்காய் | 1500 | 1600 | 2000 | 1400 | -- | -- |
| தேங்காய் (ஒன்று) | 200 | 220 | 180 | 150-200 | -- | 150 |
| இராசவள்ளி | 800 | 900 | 600 | 800 | 800 | 600 |
| வெங்காயப்பூ | 400 | 350 | 400 | 450 | -- | -- |
| முள்ளங்கி | 100 | 160 | 100 | 200 | -- | 60 |
| பொன்னாங்காணி | 100 | 80 | 100 | 80 | -- | 35 |
| வல்லாரை | 80 | 50 | 80 | 100 | -- | 40 |
| ஈரப்பலா | 160 | 100 | 100 | 200 | -- | -- |

# இராசிபலன்

23.10.2025
ஐப்பசி 06, வியாழக்கிழமை
துதியை முன்னிரவு 9.37 மணிவரை

விசாகம் பின்னிரவு 4.25 மணிவரை
சுப நேரம் 7.32-9.02 மணிவரை
இராகுகாலம் 1.32-3.02 மணிவரை

சந்திராஷ்டமம்: அச்சுவினி

வளவன்




எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், உறவினர்கள், நண்பர்கள் சந்திப்பால் மகிழ்ச்சியடைவீர்கள்.




பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், பயணங்களால் பலனுண்டு.




சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், கடமையில் கண்ணும் கருத்துடன் இருப்பீர்கள், போசன சுகமுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் மகிழ்ச்சி தரும்.




உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், தன்னம்பிக்கை துளிர் விடும் நாள், எடுத்த காரியங்களில் உற்சாகம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.




பொதுவாழ்வில் கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், உடல் நலனில் இருந்த பாதிப்புக்கள் விலகும்.




பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், உறவினர்களும் நண்பர்களும் ஒத்துழைப்பு வழங்குவார்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.




தொழில் ரீதியான அலைச்சல்கள் இடம்பெறலாம், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், தேவையற்ற மனக் குழப்பத்தை தவிர்ப்பது நல்லது.




தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், ஆன்றோர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு.




புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், தாழ்ந்த சுபாவமுண்டு.




வார்த்தைகளில் நிதானம் தேவை, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், காரிய அனுகூலமுண்டு.




குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் வாய்ப்புண்டு.




மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், உடல் நலனில் கவனம் தேவை, கடவுளை வழிபட்டு அமைதி காண வேண்டிய நாள்.

அமைதியை விட மேலான ஆனந்தம் வேறு எதுவும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பாகம் 4

# பொன்னியின் செல்வன்

### காவியத் தொடர் 891





பழுவேட்டரையரின் தோட்டத்தில் விழுந்து கிடந்தது போலவே இங் கேயும் மரங்கள் முறிந்து விழுந்து கிடந்தன. ஆகையால் தோட்டத்தில் யாராவது இருந்தாலும் அவள் சிற்ப மண்டபத்திலிருந்து வெளி வந்ததைப் பார்த்திருக்க முடியாது. இன்னும் நன்றாய் இருட்டட்டும் என்று சிற்ப மண்டபத்தை ஒட்டியே நின்று காத்திருந்தாள். ஒரு வேளை கையில் வேலையுடைய அந்த யமகிங்கரன் வந்தாலும் வரக்கூடும். ஆகையால், சிற்ப மண்டபத்துக்குள்ளும் அடிக்கடி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அரண்மனையின் தீபங்கள் ஒவ்வொன்றாகச் சுடர்விட்டு எரியத் தொடங்கின. சிறிது நேரத்துக்கெல்லாம் அரண்மனை முழுவதும் ஒரே ஜகஜ்ஜோதியாகக் காட்சி அளித்தது. கீழ் அறைகளில் ஏற்றிய தீபங்கள் பல கணிகளின் வழியாக வெளியில் ஒளி வீசின. மேல் மாடங்களில் ஏற்றிய தீபங்கள் வானத்து நட்சத்திரங்களுடன் போட்டியிட்டுக் கொண்டு பிரகாசித்தன.

"ஐயோ! பகல் வேளையைக் காட்டிலும் இரவு மிகவும் அபாயகரமாகத் தோன்றுகிறதே!" என்று மந்தாகினி எண்ணினாள். அரண்மனையை நாலுபுறமும் நன்றாக உற்றுப் பார்த்தாள். சிற்ப மண்டபத்துக்குச் சமீபமாக இருந்த அரண்மனைப் பகுதியிலே மட்டும் அதிக விளக்குகள் இல்லை என்பதைக் கவனித்துக் கொண்டாள். காவேரி வெள்ளத்திலிருந்து தான் எடுத்துக் காப்பாற்றிய தன் உயிருக்குயிரான செல்வக்குமாரனை இலங்கையில் கொல்ல முயற்சித்த பாதகனும், அவனுடைய தோழனும் அரண்மனையின் இந்தப் பகுதியிலே தான் மேல் மாடத்தில் ஏறி நின்றார்கள். ரவிதாஸன் இன்னொருவனிடமிருந்து வேலை வாங்கி யார் மீதோ எறிவது போல் குறி பார்த்த இடம் இதுதான். நல்ல வேளையாக, இந்தப் பகுதியில் அதிகமாக தீபங் கள் ஏற்றவில்லை. அதற்குக் காரணம் யாதா யிருக் கலாம்? நல்லது. அதுவும் சீக்கிரத்தில் தெரிந்து போகிறது.


நன்றாக அஸ்தமித்து அரண்மனைத் தோட்டத்தில் இருள் சூழ்ந்தவுடனே மந்தாகினி சிற்ப மண்டபத்தின் வாசலிலிருந்து மிரண்டோடும் மானின் வேகத்துடன் பாய்ந்து சென்று அரண்மனையை அடை ந்தாள். அரண்மனையின் அந்தப் பின் பகுதியில் வட்ட வடிவமான தாழ்வாரங்களும் அவற்றைத் தாங்கி நின்ற வரிசை வரிசையான தூண்களும், பல இடங்களில் மேன் மாடத்துக்கு ஏறும் படிக்கட்டுகளும் காணப்பட்டன. தாழ்வாரங்களில், பெரிய விருந்துகளுக்குச் சமையல் செய்ய உதவும் பிரம்மாண்டமான தாமிரப் பாத்திரங்கள், பழ சாய்ப் போன தந்தப் பல் லக்குகள், ஒடிந்த சிங்காத னங்கள், இப்படிப் பல பொருட்கள் இருந்தன. அவற்றின் மத்தியில் சிறிது நேரம் சுற்றிப் பார்த்து விட்டு மந்தாகினி கடைசியாக ஒரு படிக்கட்டின் மீது துணிந்து ஏறினாள். கீழே இருந்தது போலவே மேன் மாடத்திலும் வட்ட வடிவமான தாழ்வாரங்களும் ,அவற்றின் மேற் கூரை யைத் தாங்கிய சித்திர விசித் திரமான தூண்களும் வேலைப்பாடு அமைந்த பல கணி களும் நிலா முன்றில்களும் அவற்றில் பளிங்குக்கல் மேடைகளும் காணப்பட்டன.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## விருந்தோம்பல்



(நேற்றைய தொடர்ச்சி)

இவன் குளிரால் தவிக்கிறான், பசியால் வாடிக் கொண்டிருக்கிறான். இவனுக்கு உதவுங்கள். நான் இறந்தாலும் வேறு ஒரு பெண் புறாவை மனைவியாக கொள்ளுங்கள்." என்று தன் கணவனிடம் பெண் புறா கூவியது.

இதைக் கேட்டு ஆண் புறா வேடன் அருகே வந்தது. வேடன் குளிரால் நடுங்கி வெட வெடத்துக் கொண்டிருந்தான். ஆண் புறா வேடனை அன்புடன் உபசரித்து, "வேடனே உனக்கு என்ன தேவை, கூச்சப்படாமல் என்னிடம் சொல். பகைவன் ஆனாலும், வீட்டுக்கு வந்துவிட்டால் அவனை உபசரித்து மகிழ்விப்பது எங்கள் வழக்கம்," என்றது.

"ஏ ஆண் புறாவே நான் வேடன், எனக்கு நீ உதவ முன் வந்திருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. புறா இனங்களை வேட்டையாடும் எங்களை பகைவராக அல்லவா நீ கருத வேண்டும்," என்றான்.

"வேடரே. நீ சொல்வது சரிதான். நீர் எங்களுக்கு பகைவர்தான். ஆனால், வெட்ட வருபவனுக்கு மரம் நிழல் கொடுக்கிறதே. அது போல் தான் தீமை செய்தவருக்கும் உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் உதவ வந்தேன் என்று கூறியது. வேடன் குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தான். அவன் புறாவைப் பார்த்து, "என்னால் குளிரை தாங்க முடியவில்லை. படுபயங்கரமாக குளிர்கிறது. என் குளிரைப் போக்க வழியுண்டா," என்று கேட்டான்.

ஆம் என்று உதவி செய்தது. அதற்கு வேடன் [illegible] புறாவே, நீ என் குளிரைப் போக்க உதவி செய்தாய். இப்போது எனக்கு கடுமையாக பசிக்கிறது. என் பசியை போக்க ஏதாவது செய்," என்றான்.

"வேடரே, நாங்கள் ஏழைப் புறாக்கள். கவலை இல்லாமல் வாழ்பவர்கள், அன்றாடம் கிடைக்கும் உணவை சாப்பிட்டு நிம்மதியாக தூங்கி விடுவோம். மறுநாளைக்கு சேர்த்து வைப்பது இல்லை. எங்கள் காடுகளில் ஒன்றும் இல்லை. ஆனாலும், விருந்தினரான உம்மை பசியால் வாட விடுவது சரியானது அல்ல. எனவே, உமக்கு உணவு தர நான் தயாராகி விட்டேன்," என்று கூறியது.

பின்னர் எரியும் தீயை அதிகமாக்கியது. தீ மளமளவென எரிந்தது. நெருப்பை வலம் வந்து அதில் குதித்தது. "வேடரே, எனக்கு வேறு வழி தெரியவில்லை. எனவே, என்னையே உமக்கு உணவாக தருகிறேன்," என்று கூறியது. தீயில் அதன் உடல் கருகி வெந்து அதன் உயிர் பிரிந்தது. வேடன் இதைக் கண்டு மிகவும் அதிர்ச்சி அடைந்தான். புறாவின் விருந்தோம்பல் அவனை திகைப்படைய வைத்தது.

"நான் பெரும் பாவி. புத்தியற்றவன். இவ்வளவு அருமையான அன்புள்ள புறாக்களை நான் வேட்டையாடி குவித்துள்ளேன். இனி இந்த பாவத் தொழிலை செய்யமாட்டேன்," என்று எண்ணி வருந்தினான்.தன் கையில் வேட்டையாட வைத்திருந்த பொருட்களை தூக்கி வீசி எறிந்தான். பெண் புறாவையும் விடுதலை செய்தான்.

பெண் புறா விடுதலை அடைந்ததும் தன் கணவனின் தியாகத்தை எண்ணி மகிழ்ந்தது. தானும் தீயில் விழுந்து இறந்தது. தவறை எண்ணி மனம் வருந்திய வேடன் அன்று முதல் வேட்டையாடும் தொழிலை விட்டான்.

குழந்தைகளே! அடைக்கலம் புகுந்தவன் எவ்வளவு கொடியவனாக இருந்தாலும் அவனை உயிரைக் கொடுத்தாவது காத்த புறாக்களின் அன்பு எத்தனை மேலானது பார்த்தீர்களா?

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு காரியத்தையும் உள்ளன்போடு செய்யுங்கள்; பின் வேறுவிதமாகச் செய்ய ஒருபோதும் மனம் விரும்பாது. ~ யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## விடைத்தாள்களை பொறுப்புடன் திருத்துங்கள்

பரீட்சை என்பது மாணவர்களின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பது. அதேபோல போட்டிப் பரீட்சை என்பது அதில் தோற்றியவர்களின் தலைவிதியை மாற்றவல்லது.

எனவே பரீட்சை என்பதற்குள் எதிர்கால வாழ்வு தங்கியுள்ளது.

தவிர, பரீட்சைக்காகத் தயார்படுத்துதல் என்பது சாதாரணமான விடயமல்ல. பசித்திருந்து, தனித்திருந்து, விழித்திருந்து படிக்கின்ற அந்தத் தியாகம் என்பது ஒப்பற்றது.

அதிலும் எங்கள் நாட்டில் பரீட்சைச் சுமை என்பது மிகவும் மோசமானது.

இந்தச் சுமையைப் பத்து வயதுப் பாலகர்கள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை என்ற பெயரால் சுமக்கின்றனர்.

ஆம், தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை பிஞ்சுகளின் மென்மையான மனங்களைக் கசக்கிப் பிழிந்து விடுகிறது. பரீட்சைச் சுமையால் அந்தப் பிஞ்சு மாணவர்கள் படாப்பாடு படுகின்றனர்.

இவர்களோடு சேர்ந்து பெற்றோர்கள் படும் பாடு போதுமென்றாயிற்று. சிலவேளைகளில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெற்றோர்களுக்கான பரீட்சையோ என்று எண்ணுமளவிற்கு நிலைமை உள்ளது.

அந்தளவுக்கு மாணவர்களைக் கசக்கிப் பிழிந்து அந்த மாணவர்களின் இயல்பான ஆற்றலை – ஆளுமையை – சிந்தனா சக்தியை வெட்டிப் புதைத்து விடவல்ல இப்பரீட்சையை நிறுத்துவோம் எனக்கூறிய அநுரவின் அரசாங்கத்தாலும் அதனைச் செய்ய முடியவில்லை என்றாயிற்று.

நிலைமை இதுவாக இருக்கையில், அண்மையில் வெளியாகிய தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பில் மீளாய்வு செய்வதற்கு விண்ணப்பித்த மாணவர்களின் முடிவுகள் சில தினங்களுக்கு (15) முன்னர் வெளியாகின.

இதில் குறிப்பிட்ட சில மாணவர்கள் ஏலவே பெற்ற புள்ளிகளை விடக்கூடுதலான புள்ளிகள் கிடைக்கப் பெற்று புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

இங்குதான் ஒரு விடயத்தை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அதாவது, பரீட்சை விடைத்தாள்கள் பொறுப்பற்ற முறையில் திருத்தப்படுகின்றன. அத்துடன் தரம் ஐந்து மாணவர்களின் புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்துகின்ற தகைமை இல்லாதவர்களும் ஆசிரியர்களாகவுள்ளனர்.

மேலும் விடைத்தாள் திருத்தும் பணிகளின் போது மேற்பார்வையாளர்கள் தமது கடமையைச் செம்மையாக ஆற்றவில்லை என்ற உண்மையும் இங்கு புலனாகின்றன.

ஆக, விடைத்தாள் திருத்துவதற்கான கொடுப்பனவை மட்டும் மையப்படுத்தி விடைத்தாள்களைத் திருத்தும் பணியில் ஈடுபடுகின்ற அளவில் குறிப்பிட்ட சில ஆசிரியர்களின் மனநிலை வந்துவிட்டது என்பதும் தெரியவருகிறது.

ஆம், குறித்த மாணவர்கள் மீளாய்வுக்கு விண்ணப்பிக்காது விட்டிருந்தால், அவர்களின் நிலைமை எப்படியாகியிருக்கும் என ஒருக்கால் சிந்தித்துப் பாருங்கள். இதற்கும் அப்பால், மீளாய்வுக்கு விண்ணப்பிக்காததால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு இனி எந்தக் காலத்திலும் நிவாரணம் கிடைக்கப்போவதில்லை.

எனவே மதிப்புக்குரிய ஆசிரியப்பெருமக்களே! விடைத்தாள்களையேனும் சரியாகத் திருத்தம் செய்யுங்கள். அது உங்களுக்குக் கடினமாயின், அதில் இருந்து விலகிவிடுங்கள். பிழையாகத் திருத்தி மாணவர்களுக்குத் துரோகம் இழைத்து அந்தப் பாவபழியை உங்கள் சந்ததிக்குச் சேர்த்துவிடாதீர்கள்.

## இலங்கை மீதான ஜெனிவா தீர்மானம் தொடர்பில் பாராளுமன்றத்தில் விவாதம்

(கொழும்பு)

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மற்றும் அது தொடர்பான பிற பிரச்சினைகள் குறித்து பாராளுமன்ற விவாதம் நடத்தலாம் என வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத் நேற்று முன்தினம் (21) பாராளுமன்றத்தில் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இந்த விடயத்தை அவர் தெரிவித்துள்ளார்.

ஆயினும் முன்னர் விவாதத்திற்காக ஒப்புக்கொள்ளப்பட்ட 4ஆம் திகதி, வத்திக்கான் வெளியுறவு அமைச்சர் நாட்டிற்கு வருகை தருவதால், என்னால் அன்றைய பாராளுமன்ற அமர்வில் பங்கேற்க முடியாது.

எனவே விவகாரக்குழுவில் விவாதித்து, அதற்கான மாற்றுத் திகதியை ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் அறிவித்துள்ளார்.

ஜெனிவாத் தீர்மானம் தொடர்பான அரசின் நிலைப்பாடு குறித்து பாராளுமன்றத்தில் விரிவான விவாதம் விரைவில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ம-7)

## குறிகாட்டுவான் இறங்குதுறையை நிர்மாணிக்க அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

யாழ்ப்பாணம் குறிகாட்டுவான் இறங்குதுறையை நிர்மாணிப்பதற்கு அமைச்சரவை நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

குறித்த இறங்குதுறை மூலம் நயினாதீவு மற்றும் நெடுந்தீவுகளுக்குப் பயணம் செய்கின்ற பயணிகள் மற்றும் பண்டங்கள் போக்குவரத்துப் படகுச் சேவைகளுக்கான வசதிகள் வழங்கப்படுவதுடன் சமூக, சமய மற்றும் நிர்வாக ரீதியாக பரந்துபட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வரவு செலவுத் திட்டத்தின் கீழ் குறிகாட்டுவான் இறங்குதுறையை நிர்மாணிக்கின்ற வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (ம-7)

### - தொடரும் கனமழை -

## அச்சுவேலியில் அதிகபட்ச மழைவீழ்ச்சி பதிவானது

(யாழ்ப்பாணம்)

நாட்டில் தற்போது நிலவி வரும் கடும் மழையுடனான வானிலையின் மத்தியில், யாழ்ப்பாணம் - அச்சுவேலிப் பகுதியிலேயே அதிகளவான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

திணைக்களத்தின் தகவலின்படி, அச்சுவேலியில் 112.8 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. அத்துடன், நயினாதீவில் 112.5 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றின் வேகம் அதிகரித்து வீசக்கூடும்.

குறிப்பாக, காலியிலிருந்து பொத்துவில் வரையான கடற்பரப்புகள் அவ்வப்போது கொந்தளிப்பாக இருக்கும் என என வளிமண்டலவியல் திணைக்களம்எச்சரிக்கை விடுத்துள்ளது. (ம-7)

## நாட்டின் பொதுக்கடன் மீண்டும் ஏறுமுகத்தில்

(கொழும்பு)

கடந்த 9 மாதங்களில் நாட்டின் கடன் ரூ.1,060.13 பில்லியனால் அதிகரித்து ரூ.29,634.78 பில்லியனாக உயர்ந்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த நிறுவனம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற செப்ரெம்பர் 2024ஆம் ஆண்டின் இறுதியில் ரூ. 28,574.65 ஆக இருந்த மத்திய அரசின் மொத்த பொதுக் கடன், ஜூன் 2025 இறுதி வரையிலான 9 மாத காலத்தில் ரூ. 29,634.78 ஆக அதாவது ரூ.1,060.13 ஆல் அதிகரித்துள்ளது.

அதன்படி செப்ரெம்பர் முதல் ஜூன் வரையிலான 9 மாதங்களில் 'நிலுவையில்' உள்ள பொதுக் கடன் ஒவ்வொரு மாதமும் ரூ.117.79 பில்லியன் அதிகரித்து வருகிறது.

வெளிநாட்டு இருப்புக்களை அதிகரிக்க இயலாமை, பட்ஜெட் மூலம் ஒதுக்கப்பட்ட மூலதன நிதியைச் செலவிட இயலாமை மற்றும் திறைசேரிக்கு திருப்பி விடப்பட்டமை ஆகியவை பொருளாதார வளர்ச்சியைப் பாதித்துள்ளன.

அரசாங்கம் வரி வருவாய், வெளிநாட்டு பணம் அனுப்புதல் மற்றும் சுற்றுலா வருமானத்தை அதிகரிக்க முடிந்தாலும் நாட்டில் தொடரும் உயர்ந்த பொதுக் கடன் ஒரு கடுமையான நெருக்கடியாகும் என்று அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

## "விடியல்" நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

மாற்றம் அறக்கட்டளையும் யாழ்.மாவட்ட செயலகமும் இணைந்து நடாத்தும் "விடியல்" நூல் வெளியீட்டு விழா இன்று 23ஆம் திகதி வியாழக்கிழமை யாழ். மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் பி.ப. 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாற்றம் அறக்கட்டளையின் இயக்குநர் பே.பெனிக்னஸ்தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பிரதம விருந்தினராகவும் யாழ்.மாவட்டச் செயலாளர் ம. பிரதீபன் சிறப்பு விருந்தினராகவும் வளர்பிறை இயக்குநர் அருட்பணி சூசை டேமியன் அமதி அடிகளார் கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நூலுக்கான மதிப்பீட்டுரையை, யாழ் தேசிய கல்வியியல் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளரும், தேசிய கல்வி நிறுவனத்தின் வளவாளருமான கலாநிதி பா.தனபாலன் வழங்கவுள்ளார். (ம-7)

## நாகை கப்பல் சேவை நவம்பரில் நிறுத்தம்

(நாகபட்டினம்)

பருவநிலை மாற்றம் காரணமாக நாகபட்டினம் காங்கேசன் துறைக்கிடையேயான பயணிகள் கப்பல் போக்குவரத்து நவம்பர் மாதம் நிறுத்தப்படும் என்று சுபம் கப்பல் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் சுந்தர்ராஜன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது,

வடகிழக்குப் பருவ மழை ஆரம்பித்துள்ளதால் பருவநிலை மாற்றம் ஏற்படும். இதனால், கடல் சீற்றம் மற்றும் சூறைக்காற்று காரணமாக கப்பல் இயக்குவதில் சிக்கல் உள்ளது. ஆகவே நவம்பர் மாதம் முழுவதும் சிவகங்கை பயணிகள் கப்பல் இயக்கப்படாது.

கடந்த 30 ஆண்டுகளின் காலநிலை தகவல்களை அடிப்படையாகக் கொண்டு நிகழாண்டு நவம்பர் மாதத்தை தவிர்த்து டிசம்பர், ஜனவரி மாதங்களில் வழக்கம்போல் சிவகங்கை கப்பல் இயக்கப்படும் என்றார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்

## ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நாட்டின் வளர்ச்சி

### பகுதி VI

29

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம், தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

இரு மன்றங்களைக் கொண்ட இலங்கைப் பாராளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபையில் 101 அங்கத்தவர்கள் இடம் பெறுவர். இவர்களுள் சர்வ ஜன வாக்குரிமை மூலம் தேர்தல் தொகுதிவாரியாக 95 பேரும் ஆளுநர் நாயகத்தால் 6 பேரும் தெரிவு செய்யப்பட்டனர்.

செனட் சபையில் 30 அங்கத்தவர்கள் இடம்பெறுவர். இவர்களுள் 15 பேர் பிரதமரின் சிபாரிசின் பேரில் ஆளுநர் நாயகத்தாலும் 15 பேர் மக்கள் பிரதிநிதிகள் சபை உறுப்பினரின் வாக்குகள் மூலமும் தெரிவு செய்யப்படுவர்.

சோல்பரி யாப்பின் படி பிரதமரைத் தலைவராகக் கொண்ட அமைச்சரவைக்கே நிர்வாகப் பொறுப்பு வழங்கப்பட்டிருந்தது. பாராளுமன்ற உறுப்பினர்களுள் பெரும்பான்மையானவர்களின் ஆதரவைப் பெற்ற ஒருவர் பிரதம மந்திரியாக ஆளுநர் நாயகத்தால் நியமிக்கப்பட்டார். பிரதமரின் விருப்பின்படி அமைச்சரவை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் நீதிச் சேவையின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக நீதிச் சேவை ஆணைக்குழுவும், நிர்வாக சேவையின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக அரசாங்க சேவை ஆணைக் குழுவும் நியமிக்கப்பட்டன.

நாட்டின் நிதி நடவடிக்கைகளுக்காக அரச பொது நிதி எனும் அமைப்பும் உருவாக்கப்பட்டது.

**தொகுதிகள் எல்லை நிர்ணயம்**

டொனமூர் ஆணைக்குழுவின் எடுத்துரைகளின் விளைவாக ஏற்பட்ட அரசியல் மாற்றங்களினால் இலங்கை மக்கள் பொதுவாக திருப்தியடையவில்லை. பூரண பொறுப்பாட்சி இலங்கை மக்களுக்கு வழங்கப்படாமை, ஆளுநரது விசேட அதிகாரங்கள் மற்றும் அமைச்சர்களைத் தெரிவு செய்யும் முறை ஆகிய விடயங்கள் கண்டனத்துக்குள்ளாயின. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஒழிக்கப்பட்டமை சிறுபான்மைச் சமூகத்தினரிடையே ஒருவித அச்சத்தை உண்டாக்கியது.

1936 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பொதுத் தேர்தல் முடிவடைந்தவுடன் தமிழர்களில்லாத சர்வ சிங்கள அமைச்சரவை அமைக்கப்பட்டது. இச் சம்பவத்திற்கு முன்பு சிறுபான்மைச் சமூகத்தவர்கள் தம்மில் அமைச்சராக ஒன்று அல்லது இரண்டுபேர் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய சந்தர்ப்பமிருக்கிறதென்று எண்ணியிருந்தனர். ஆனால் இவ் அமைச்சரவை, இதுவரையும் எண்ணியிருந்தது தவறென அவர்களுக்கு எடுத்துக்காட்டிற்று. ஆகவே சிறுபான்மைச் சமூகத்தவர்கள், தங்கள் நிலைமையைப் பாதுகாக்க வேறுவழியை கடைப்பிடிக்கவேண்டுமென எண்ணலாயினர். இதன் காரணமாகத்தான் ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்கள் தலைமையில் ஐம்பதுக்கு ஐம்பது என்ற கோஷம் எழுந்தது.

பாராளுமன்ற பிரதிநிதிகளின் தானங்களைச் சரிபாதியாகச் சிங்களவருக்கும் சிறுபான்மையோருக்குமிடையே பிரித்தல் (Balanced Representation) அல்லது வேறு ஏதாவது முறைப்படி வகுப்புவாரியாகப் பிரதிநிதித்துவம் அளித்தல் என்பது தான் இந்த ஐம்பதுக்கு ஐம்பதின் தத்துவம். மேலும் டொனமூர்த் திட்டம் நடைமுறைக்கு வந்த காலம் தொடக்கம் பெரும்பான்மையினருக்கும் சிறுபான்மையினருக்கும் இடையே கருத்து வேற்றுமை இருந்ததோடு இனத்துவேஷமும் வளர்ந்து வரலாயிற்று. ஒவ்வொரு இனத்தவரும் மற்ற இனத்தவர் மீது சந்தேகம் கொண்டனர்.

டொனமூர் ஆணைக்குழு, பிரதேசவாரிப் பிரதிநிதித்துவத்தைச் சிபாரிசு செய்த போது, பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் வகுப்புவாத மனப்பான்மையை ஒழிக்குமெனக் கருதியது. ஆனால் அக் கருத்து பிழையானதெனப் பின்பு நடந்த சம்பவங்கள் புலப்படுத்தின. ஏனெனில் தமிழர் அதிகமாக வாழும் வட, கீழ் மாகாணங்களில் ஒரு சிங்களவரோ அன்றேல் தென் மாகாணத்தில் ஒரு தமிழரோ தேர்ந்தெடுக்கப்படவில்லை. பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறை சிறுபான்மையினரைப் பாதித்ததால் அவர்கள் அதனைத் தொடர்ந்து எதிர்த்துக் கொண்டேயிருந்தார்கள்.

சோல்பரி ஆணைக்குழு சிறுபான்மையினரின் விரக்தியை கருத்தில் எடுத்துக் கொண்டபோதும் ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் ஐம்பதுக்கு ஐம்பதின் தத்துவத்தை கணக்கில் எடுக்காமல் சிறுபான்மையினருக்கு சில பாதுகாப்புக்களுடன் கூடிய பிரதேசவாரிப் பிரதிநிதித்துவத்தை சிபாரிசு செய்து, அதன்படி தேர்தல் தொகுதிகளை நிர்ணயிப்பதற்கு ஒரு எல்லை நிர்ணய ஆணைக்குழு நியமிக்க வேண்டுமென தகவுரை செய்தது.

இலங்கை மக்களின் விருப்பங்களை நிறைவேற்றும் நோக்கோடு சோல்பரி ஆணைக்குழுவினால் உருவாக்கப்பட்ட அரசியல்யாப்புச் சீர்திருத்தம்- 1946 நடைமுறைக்கு வந்ததோடு, 1946 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி எல்.எம். டி. த. சில்வா எல்லை நிர்ணய ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. அன்றைய அரசியல்யாப்புச் சீர்திருத்தத்தின் பகுதிகள் IV மற்றும் IX களில் எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் கடமைகளும் பொறுப்புக்களும் விதந்துரைக்கப்பட்டிருந்தன.

அவையாவன எல்லை நிர்ணய ஆணைக்குழு அங்கத்தவர்கள் அரசியற் சார்பற்றவர்களாக இருக்கவேண்டும். இலங்கையின் மாகாணம் ஒவ்வொன்றையும் பல தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கும் கடமை இக் குழுவிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட சாதி, சமயத்தைச் சேர்ந்த மக்கள் பெரும்பான்மையாக வாழும் ஒரு பரந்த பிரதேசத்தில் அவர்களிலும் வேறுபட்ட இன்னொரு சாதி, சமயத்தைச் சேர்ந்த மக்கள் அப்பரந்த பிரதேசத்தின் சில இடங்களில் கூடுதலாக சேர்ந்து வாழ்ந்தால், அச் சிறுபான்மையினருக்கும் பிரதிநிதித்துவம் வரக்கூடியதாக தேர்தல் தொகுதிகள் அமைய வேண்டும்.

தேவையானவிடத்து பல் அங்கத்தவர்கள் கொண்ட தேர்தல் தொகுதிகள் உருவாக்கவேண்டும். இனங்களுக்கு இடையே சமநிலையைப் பேணுவதற்காக மாகாண மட்டத்தில் 1931ஆம் ஆண்டின் சனத்தொகை கணிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு தேர்தல் தொகுதியும் 75,000 இற்கு கிட்டிய மக்களை கொண்டிருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளல் மற்றும் மாகாண அடிப்படையில் ஒவ்வொரு 1000 சதுர மைல் விஸ்தீரணமுள்ள பிரதேசத்திற்கு ஒரு பிரதிநிதியை வழங்கும் பொருட்டு தொகுதிகளைப் பிரித்தல் வேண்டும் என்பனவாகும்.

இதன்படி மாகாணத்தின் விஸ்தீரணத்தை மூலாதாரமாகக் கொண்டு தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட்டபோது மாகாணத்துப் பிரதிநிதிகள் பின்வருமாறு ஒதுக்கப்பட்டனர். மேல் மாகாணம் - 1, மத்திய மாகாணம் - 2, தென் மாகாணம் - 2, வட மாகாணம் - 4, கீழ் மாகாணம் - 4, வடமேல் மாகாணம் - 3, வட மத்திய மாகாணம்-4, ஊவா மாகாணம் - 3 மற்றும் சப்பிரகமுவ மாகாணம் - 2. மொத்தம் -25.

விஸ்தீரணம் மற்றும் சனத்தொகை அடிப்படையில் மாகாண மட்டத்தில் மொத்தப் பிரதிநிதிகள் பின்வருமாறு ஒதுக்கப்பட்டனர். மேல் மாகாணம் - 20, மத்திய மாகாணம் - 15, தென் மாகாணம் - 12, வட மாகாணம் - 9, கீழ் மாகாணம் - 7, வடமேல் மாகாணம் - 10, வட மத்திய மாகாணம் - 5, ஊவா மாகாணம் - 7 மற்றும் சப்பிரகமுவ மாகாணம் - 10. மொத்தம் -95.

மேல் மாகாணத்தேர்தல் தொகுதிகள் (18 தொகுதிகள்)

1.கொழும்பு வடக்கு, 2. கொழும்பு மத்தி (3 அங்கத்தவர்கள் தொகுதி), 3. கொழும்பு தெற்கு, 4. வெள்ளவத்தை-கல்கிசை, 5. ஜா-எல, 6. நீர்.கொழும்பு, 7. மீரிகம, 8. கம்பஹா, 9. அத்தனகல்லை.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்சாரம்...

நாவாந்துறை மண்பிட்டிப் பகுதியில் நேற்று இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதேயிடத்தைச் சேர்ந்த புவனேந்திரன் தேவநாதன் (வயது-47) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் பிறப்பில் இருந்தே கை கால் இயலாதவர். வாயினாலே சகல வேலைகளையும் செய்து வந்துள்ளார்.

இந்நிலையில் நேற்றுப் புதன் கிழமை (22) முற்பகல் வாயினால் மின்சார வயரினை றோல்பிளக்கில் கொளுவியபோது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

மஹஜன சம்பத
திகதி 2025.10.22
சீட்டிழுப்பு இலக்கம் 5990
O 3 5 2 9 8 5
அத சம்பத
O 2 9 8 5
சீட்டிழுப்பு இலக்கம் 0565
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.10.22
சீட்டிழுப்பு இலக்கம் 106
மீனம் 13 44 57

தன நிதானய
திகதி - 2025.10.22
சீட்டிழுப்பு இலக்கம் - 2020
K 06 26 32 66 K
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
Double Chance இலக்கம்
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324

மெகா பவர்
திகதி 22/10/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2338
வெற்றி எழுத்து சுப்பர் இலக்க வெற்றி இலக்கங்கள்
X 14 10 23 39 58
தொலைபேசி 0112-470662, 0114-607000 இணையம் www.nlb.lk

NLB ஜய JAYA
திகதி 2025.10.22
சீட்டிழுப்பு இலக்கம் 0258
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
T 3 2 7 0
தேசிய லொத்தர் சபை
தொலைபேசி 0112-470662, 0114-607000 இணையம் www.nlb.lk

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4232
சீட்டிழுப்பு திகதி 22.10.2025
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கங்கள் 02 32 55 61
J
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.10.22
சீட்டிழுப்பு இலக்கம் 1299
மிதுனம் 20 30 36 47 மிதுனம்
தன யோக இலக்கம்
தேசிய லொத்தர் சபை
நாளுக்கான விதி எண்

## காரைநகரைச்...

சுங்க சேவையில் பதவி வழி உத்தியோகத்தர் அடையக்கூடிய ஆகக் கூடிய பதவி இதுவாகும்.

1993ஆம் ஆண்டு உதவி சுங்க அத்தியட்சகராக நியமனம் பெற்ற லோகநாதன், 2016ஆம் ஆண்டு சுங்க அத்தியட்சகராகவும் 2024ஆம் ஆண்டு சுங்கப் பணிப்பாளராகவும் பதவி உயர்வு பெற்றிருந்தார்.

இவர் 1991ஆம் ஆண்டு விஞ்ஞான மாணி (BSC) பட்டத்தை யாழ்.பல்கலைக்கழகத்திலும் 2009ஆம் ஆண்டு முதுகலைமாணி (MPM) பட்டத்தை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்திலும் (SLIDA) பெற்றார். இவர் சுங்கத்திணைக்கள இந்து ஊழியர் சங்கம் மற்றும் சுங்க மேற்பார்வை உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவரும் ஆவார். (ம-7)

## யாழில்...

பகுதியைச் சேர்ந்த நவயோகன் ரிஹானா (வயது - 7) என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுமி நேற்று முன்தினம் (21) மாலை சுவாசிப்பதற்கு சிரமப்பட்டதால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்றிரவே உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். வலிப்புடன், நுரையீரலில் ஏற்பட்ட கிருமித்தொற்று காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்றுப் பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது. (ம-7,60,104)

## மன்னாரில்...

பஸ் விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் மன்னார் முருங்கன் பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞன் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

கொழும்பிலிருந்து மன்னார் நோக்கிப் பயணித்த தனியார் சொகுசுப் பேருந்து கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலத்தி விபத்துக்குள்ளானதில் குறித்த இளைஞன் உயிரிழந்துள்ளார்.

பஸ்ஸில் பயணித்த பலர் காயமடைந்த நிலையில் செட்டிகுளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-7,285)

## யாழில் பிறந்து...

பரந்தாமன் நிரூசா தம்பதிகளின் சிசுவே உயிரிழந்துள்ளது.

குறித்த சிசு கடந்த ஒன்பதாம் திகதி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பிறந்த நிலையில் பிற்பகல் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தது.

இந்நிலையில் சிசு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (21) உயிரிழந்துள்ளது.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். கேணியா காரணமாக உயிரிழப்பு ஏற்பட்டதாக பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,60)

## நிமோனியாக்...

சிவபாலசிங்கம் காந்தரூபன் (வயது-42) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் குமாரசாமி வீதி, புத்தூர் கிழக்கில் உள்ள தாயார் வீட்டில் இருந்த நிலையில் காய்ச்சல் காரணமாக வைத்தியசாலையில் மருந்து எடுத்துவந்து கதிரையில் உட்கார்ந்திருந்தபோது உயிரிழந்துள்ளார்.

சடலம் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்த நிலையில் யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார்.

பிரேத பரிசோதனையில் நிமோனியாத் தொற்றால் மரணம் சம்பவித்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (ம-7,60)

## கொல்லப்பட்ட...

களுடன் தொடர்புடையவர்களுக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாடுகளினால் குறித்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாகவும் இந்தத் துப்பாக் கிச் சூட்டினால் பொதுமக்களுக்கு எந்தவிதப் பாதுகாப்பு அச்சுறுத்தலும் ஏற்படவில்லை என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார். (ம-7)

## மாத்...

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த நிலையில் மாத்தறை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

அவர் பிரதேச சபையின் தலைவர் நாற்காலியில் அமர்ந்திருந்த போது துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை துப்பாக்கிதாரிகள் மோட்டார் சைக்கிளில் பிரதேச சபை வளாகத்திற்குள் நுழைந்து துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் தொடர்புடைய சந்தேகநபர்களை அடையாளம் கண்டு கைது செய்ய விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

துப்பாக்கிதாரிகள் பிரதேச சபை தலைவரிடம் கடிதம் ஒன்றில் கையொப்பம் பெறுவது போன்று பிரவேசித்து இந்தத் துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளதாகத் தெரியவந்துள்ளது. (ம-7)

## போதை...

திரைகளும் மீட்கப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

உத்தியோகபூர்வ முடிவுகள்
22.10.2025 வெற்றி வாரம் 0698 வர்ணம்
ஆங்கில எழுத்து Y
மற்றும் வெற்றி இலக்கம் 0 0 9 8 3 2
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.26,957,437.60
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2964 வர்ணம்
சீட்டிழுப்பு திகதி 2025.10.22 தினம் புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் 28 42 52 57 S
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 69,189,616.80
அபிவிருத்தி லொத்தர் சபை

சனிதா Shanida
திகதி 22.10.2025 வெற்றி வாரம் 5125 வர்ணம்
வெற்றி இலக்கங்கள் 04 54 57 59 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 62,271,156.80
செகன்ட் சான்ஸ் விசேட இல. ரூ. 50,000/- பணப்பரிசு
அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 0112 333 546-47
www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஜயோதா Jayoda
திகதி 2025.10.22 வெற்றி வாரம் 2172 வர்ணம்
வெற்றி இலக்கங்கள் 19 20 29 67 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 32,365,560.80
அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 0112 333 546-47
0114 824 824, 0112 333 778 or 1919
0114 825 825
www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு வாரம் 4676 வர்ணம்
சீட்டிழுப்பு திகதி 22.10.2025 தினம் புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் 25 29 31 55 மகரம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,035,078.00
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
I 02 05 64 71 73
சுப்பர் இலக்கம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.601,902,306.60
சீட்டிழுப்பு வாரம் 2140
22.10.2025 புதன்கிழமை
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம் : 2790
வர்ணம் :
சீட்டிழுப்பு திகதி : 2025.10.22
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,653,606.40
வெற்றி இலக்கங்கள் 46 47 64 69 H
ரூ.100,000/- பணப் பரிசுகளுக்கான விசேட இலக்கங்கள்
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Divorce மணப்பெண்கள் தேவை

01) காரைநகர், இந்து, 1990, ஆயிலியம், ACCA, Own Business, UK Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (28386)
02) வடமராட்சி, இந்து, 1985, கார்த்திகை, MSc in electrical engineer, UK Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (29463)
03) பளை, இந்து, 1984, அவிட்டம், Phd, UK Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (33058)
04) காரைநகர், இந்து, 1986, மகம், Phd, Lecturer, UK Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(36878)
05) கரவெட்டி, இந்து, 1984, விசாகம், Bachelor of computer Application, UK Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (37556)
06) திருநெல்வேலி, இந்து, 1986, கேட்டை, Bsc, London Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (46812)
07) கரம்பன், Roman Catholic, 1972, Mechanical engineer, UK Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (24847)
08) நெல்லியடி, இந்து, 1991, பூராடம், HND (Jaffna University), USA Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (47452)
09) நல்லூர், இந்து, 1980, சித்திரை, B.com(USA), Administrator, USA Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (25039)
10) யாழ்ப்பாணம், இந்து, 1982, அத்தம், Masters in Electrical Engineering (USA), Canada + USA Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (24750)

நீங்களாகவே எமது website www.thaalee.com இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம்.

(C-4169)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728



## வேலை வாய்ப்பு
## டிரைவர் தேவை

நிறுவனம் : Sun Marketing (Pvt) Ltd - யாழ்ப்பாணம் தகுதி

- செல்லுபடியாகும் AD வகை லைசென்ஸ்.
- குறைந்தது 2 வருட அனுபவம் இருந்தால் முன்னுரிமை.
- பொறுப்பு, நேர்த்தி, ஒழுக்கம், பாதுகாப்பான ஓட்டுநர் திறன் அவசியம்.
- சம்பளம் அனுபவத்தைப் பொறுத்து வழங்கப்படும்.

Sun Marketing (Pvt) Ltd
Email : sunmarket012@gmail.com
Mobile : 076 139 1993

(1671)


## தேசிய பாதுகாப்பு..

யாற்றும் போதே இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

வெலிகம பிரதேச சபையின் தலைவர் லசந்த விக்ரம சேகர சபைக்குள் தனது கடமைகளை முன்னெடுத்து வரும் வேளையில் அவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

தனது கடமைகளைச் செய்து கொண்டிருந்தபோது நடத்தப்பட்ட இந்த துப்பாக்கிச் சூட்டில் பலத்த காயமடைந்த அவர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. பிரதேச சபைத் தலைவர் என்பவர் மக்கள் பிரதிநிதி ஆவார்.

மக்கள் பிரதிநிதிகள் இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளாவது பெரும் அச்சுறுத்தல்களை ஏற்படுத்தியுள்ளது.

இது தேசிய பாதுகாப்பு சார்ந்த பிரச்சினையொன்றாக இருக்கிறது என சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இந்த நிலையில், குறித்த விடயம் தொடர்பில் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் அறிவித்த போது சபாநாயகர், நிலையியற் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் தற்போது இது குறித்து கதைக்க முடியாது என்று அறிவித்த நிலையில், பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சியினர் கடும் கூச்சல் குழப்பத்தில் ஈடுபட்டனர்.

இதனால் சில நிமிடங்கள் பாரா ளுமன்ற நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டது.(ம)


## யாழ்ப்பாணத்தில் Voyzant

சுற்றுலாப் பயணம்

மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து, சிங்கப்பூர், வியட்நாம், மாலைதீவு, துபாய் போன்ற நாடுகளிற்கான சுற்றுலாப் பயணங்கள் தனிப்பட்ட/ குழுக்களிற்கு ஏற்றவாறும் செய்து தரப்படும்.



மேலதிக விபரங்களுக்கு : Voyzant(PVT)Ltd
No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
(OLR Church இற்கு அருகில்)
077 284 9535,.021 222 6866 (C-4109)



## மணமகள் தேவை

வல்வெட்டித்துறை, இந்து, 1994 இல் பிறந்த இன்ஜினியர் மணமகனுக்கு மணமகள் தேவை. எதிர்பார்ப்பு - வெளிநாடு

077 960 7563
077 644 5927

(C-4163)



## வீடு, காணி தேவை

யாழ்ப்பாணம், நல்லூர், கல்வியங்காடு, முத்திரைச் சந்தி மற்றும் திருநெல்வேலிப் பகுதிகளில் நல்ல சூழலில் வீட்டுடன் அல்லது வெறும் காணி (2 பரப்பில்) உடன் தேவை. விற்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். (தரகர் தேவையில்லை)

076 472 2467



## கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை

| | |
|---|---|
| 5-9 Kg | 3670/- |
| 11-16 Kg | 2640/- |
| 21-27 Kg | 2440/- |

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

(C-4167)

UK 11Kg - 1390/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- Australia 11Kg - 2150/- Italy 11Kg - 2270/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237




## வீடு வாடகைக்கு

இராமநாதன் வீதி பல்கலைக்கழகத்திற்கு முன்பாக சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

077 411 8851
076 882 8694

(5712)


# மரண அறிவித்தல்



மலர்வு 1962 - 09 - 08

உதிர்வு 2025 - 10 - 21

## கந்தையா லோகேந்திரா [காசி]

### (காசி களஞ்சிய உரிமையாளர்)

காரைநகர் களபூமி வளுப்போடையைப் பிறப்பிடமாகவும் ஈச்சமோட்டை யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா லோகேந்திரா அவர்கள் கடந்த 21.10.2025 செவ்வாய்க் கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் கணேசபிள்ளை - லோகாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும் தனலட்சுமியின் அன்புக் கணவரும் சத்தியேந்திரா (விதானை), சாரதாதேவி(தங்கம்), காலஞ்சென்ற கல்யாணி (ஆத்தை), யோகேஸ்வரி(கோமதி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் நிஷாந் (Keerthika Pharmacy ,KASI Trading PVT(Ltd)), கிரிஷாந்(Luxmy Super Market), கோபிகா(UK-London), கீர்த்திகா(University of Jaffna) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மகாதேவன், பத்மரஜினி, சற்குணராசா, சுந்தரேஸ்வரன், தவபாலசிங்கம், நேசமணி, தேவராசா, தயாபரன், புலேந்திரன் ஆகியோரின் மைத்துனனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 23.10.2025 வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் ஈச்சமோட்டை சுண்டுக்குளியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைகளுக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

076 852 3875
077 985 1946

தகவல்: குடும்பத்தினர்

(5711)

# மரண அறிவித்தல்



மலர்வு 13 - 03 - 1943

உதிர்வு 22 - 10 - 2025

## சண்முகநாதன் கந்தராசா

அராலி மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகநாதன் கந்தராசா அவர்கள் நேற்று 22.10.2025 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகநாதன் - மனோன்மணி தம்பதிகளின் அன்பு மகனும் சிவகுரு - நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சிவஞானசோதியின் அன்புக் கணவரும் சண்முகதாஸ்(வட்டுக்கோட்டை தபால் நிலையம்), ராஜமனோகரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற தர்மநாயகியின் அன்புச் சகோதரனும் சயந்தன்(யாழ்ப்பாணம் அஞ்சல் அலுவலகம்), அனுஷா(மாவட்ட சமூக சேவைகள் அலுவலகம், கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமனாரும் புஸ்பராசாவின் சகலனும் சோபிகன், க்விலயா, துளசிகன் ஆகியோரின் அன்புப் பேரனும் கோபிநாத், விஸ்வநாத், பிறேம்நாத் ஆகியோரின் தாய் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 23.10.2025 வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேலன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லபடும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மகன் - 077 774 2570
மகன் - 074 243 4371

தகவல்: குடும்பத்தினர்

(C-4168)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல. 101, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.10.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org